# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report
# 2012












**ශ්‍රී ලංකා උඩරට සංවර්ධන අධිකාරිය**
இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை
Udarata Development Authority of Sri Lanka

**ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය**
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
Ministry of Economic Development

# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# Annual Report

# 2012

# உள்ளடக்கம்


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1. | இலக்கு மற்றும் செயற்பணி | 1 |
| 2. | தலைவரது ஆசிச் செய்தி | 2 |
| 3. | பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி | 5 |
| 4. | அறிமுகம் மற்றும் வரலாற்று பின்னனி | 6 |
| 5. | முகாமைத்துவச் சபை | 12 |
| 6. | நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் | 15 |
| 7. | நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் பதவியனியினர் | 16 |
| 8. | நிர்வாகப் பிரிவு | 18 |
| 9. | நிதி முகாமைப் பிரிவு | 20 |
| 10. | அபிவிருத்திப் பிரிவு | 26 |
| 11. | கால்நடைவள அபிவிருத்திக் கருத்திட்டம் | 37 |
| 12. | பொறியியல் அலகு | 40 |
| 13 | கணக்காய்வு அறிக்கை | 48 |



## இலக்கு

அபிமானம் மற்றும் சௌபாபக்கியம் நிறைந்த மலையகப் பிரதேசம்



## செயற்பணிகள்

மலையகப் பிரதேசத்தில் வாழ் மக்களது சமூக பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு வேலைத் திட்டங்களை முன்வைத்தல், செயற்படுத்துதல், இணைப்புச் செய்தல் மற்றும் கண்கானித்தல்

# தலைவரது ஆசிச் செய்தி



2005 இன் 26 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இந்த அதிகாரசபை 2006 ஆம் அண்டு மார்ச் மாதம் முதல் செயற்படுத்தப்படுகின்றது. எமது அதிகார சபையின் அதிகார பிரதேச எல்லைக்குட்பட்டு வாழ் மக்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது மற்றும் அவர்களது வறுமையை ஒழிப்பது போன்றன எமது பிரதான இலக்காகக் காணப்படுகின்றன. அதற்கு அமைய உட்கட்டமைப்பு வசதிகள் வாழ்வாதார மற்றும் கல்வி அபிவிருத்தி போன்ற பிரதான அபிவிருத்தி வகுதிகள் 03 இனை பிரதானமாகக் கொண்டு மலையகப் பிரதேசத்தின் சமூக பொருளாதார மற்றும் கலாசார அபிவிருத்திகளை அடைவதை நோக்காகக் கொண்ட வேலைத் திட்டங்களை செயற்படுத்துவது, இணைப்புச் செய்வது மற்றும் கண்காணிப்பது எமது பிரதான செயற்பாடுகளாக இணங்காண முடியும்.

அதிமேன்மைதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் 2005 இல் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் 2006 ஆம் ஆண்டு முதல் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வதிகார சபை மலையக மக்களது மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதன் பொருட்டு மிகவும் முக்கியமான அபிவிருத்திச் செயற்பாடுகள் பல ஆரம்பிக்கப்பட்டு முடிவுருத்தப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு ஆகின்ற போது எமது அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டு 06 ஆண்டுகள் ஆகின்ற அதே வேலை, அந்த 06 ஆண்டுகளிலும் எமது அதிகார சபைக்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் பெற்றுத் தரப்பட்டு, எமது அதிகார பிரதேசத்தினுள் வாழ்கின்ற மக்களது மேற்குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பெற்றுக் கொடுப்பதன் நிமித்தம் ரூபா.மி 1750 நிதி தொகையை அதிமேன்மைதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் எமக்கு பெற்றுத் தரப்பட்டுள்ளது என்பதை பெறுமையுடன் விஷேடமாக குறிப்பிட விரும்புகின்றேன். அதிமேன்மைதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களது மஹிந்த சிந்தனை கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திக் கொண்ட நாட்டை கட்டி எழுப்பும் அபிமானத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பெசில் ராஜபக்ஷ அவர்களது வழிகாட்டலின் கீழ் புதிய கிராம அபிவிருத்தியின் ஒரு நடவடிக்கையாக ஹதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவின் நாரங்கஸ்பிடிய கிராமத்தை மாதிரிக் கிராமமாக அமைப்பதற்கு முதன் முதலில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதிமேன்மைதகு ஜனாதிபதி அவர்களது மேற்குறிப்பிடப்பட்டுள்ள எண்ணக்கருவின் கீழ் கிராமிய மக்களது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு மேற்குறிப்பிடப்பட்ட காலப் பகுதியில் மிகவும் அதிகமான அபிவிருத்தி செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக பின்தங்கியுள்ள மலையக கஷ்டப்

பிரதேசங்களில் அமையப் பெற்றிருந்த வீதிகளின் இடர்பாடுகளை குறைத்துக் கொள்வதன் நிமித்தம் நாரங்கஸ்பிடிய விவில வீதி மற்றும் உள்நுழைவு வீதி அகுரனை உடவெலிகெடிய பாலம் மற்றும் நுழைவு வீதி. உடுநுவரை ஹொரேகொடை வீதி உட்பட வீதிகள் பலவற்றின் நிர்மானப் பணிகள் முடிவுருத்தப்பட்டுள்ளன. அவ்வாறே மக்களது சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு கொத்மலை மாவெல சனசமூக நிலையம், நவதிஸ்பனே பல்கட்டடத் தொகுதி மற்றும் கொத்மலை மல்லன்த பல் நோக்கு கட்டடத் தொகுதி என்பவற்றின் நிர்மானப் பணிகள் முடிவுருத்தப்பட்டுள்ளன.

அவ்வாறே பொது மக்களது சுகாதார வசதிகளை மேம்படுத்துவதன் பொருட்டு கலகெதர நகரத்தின் பொது மலசலகூட வளையம் ஒன்றினையும் கடுகண்ணாவை நகரத்தில் பொது மலசலகூட தொகுதி ஒன்றினையும் நிர்மானித்து உரிய பிரதேச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. அத்துடன், ஹதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ பூஜாபிடிய, மற்றும் அகுரனை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் மலசலகூட வசதிகள் இருக்காத குடும்பங்கள் 414 இற்கு உரிய வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொது மக்களது வாழ்வாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டுள்ள வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு விஷேட கவனத்தை 2012 ஆம் ஆண்டு இவ் அதிகாரசபை செலுத்தியது. அங்கு விஷேடமாக விவசாயத்திற்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளது. கைவிடப்பட்டுள்ள வயல் நிலங்களில் அறுவடை செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் விவசாய வீதி ஒழுங்கமைப்புக்களில் முறையே 72 மற்றும் 101 வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. கைவிடப்பட்ட வயல் நிலங்களின் அறுவடை வேலைத் திட்டத்தின் கீழ் தேசிய பொருளாதாரத்திற்குறப்பட்டுள்ள உற்பத்தியின் ஊடாக மேலதிக வருமானம் கிடைப்பதற்கு மிகவும் விஷேடமான வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது. இதன் ஊடாக நீர் இன்றி பயிர் செய்கை மேற்கொள்ள முடியாது இருந்த மற்றும் கைவிடப்பட்ட வயல் நிலங்கள் பலவற்றில் மீண்டும் அறுவடை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. அத்துடன் விவசாய உற்பத்திகளை கொண்டு செல்வதற்காக விவசாய வீதிகளின் மூலம் பெரிதும் பயன் பெறக் கூடியதாக இருந்தது.

கிராமிய மக்களது வருமானம் உருவாக்கலை மேம்படுத்துதல், போசக்கினை உயர்த்துதல், போன்ற நோக்கங்களை அடைவதற்காக கால்நடை வளர்ப்புத் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன. இதன் கீழ் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதிகார எல்லைக்குள் கால்நடை வளர்ப்பு வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இங்கு பொருத்தமான பயனுகாரிகளை தெரிவு செய்து பால் உற்பத்தியை உயர்த்துவதன் பொருட்டு உயர் தரத்தினாலான பால் மாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் உரிய பிரமானத்தில் மாட்டுத் தொழுவங்களை நிர்மானிப்பதன் பொருட்டு ஒதுக்கீட்டை போலவே, புதிய தொழில்நுட்பத்துடன் பயிற்சி பாடநெறிகளும் நடாத்தப்பட்டன. அவ்வாறே, இப்பிரதேசங்களுக்கு இசைவான ஆடு வளர்ப்பு வேலைத் திட்டங்கள் ஆடு வளர்ப்பை

பிரபல்யப்படுத்துவதன் நோக்கில் பொருத்தமான பண்ணையாளர்களை தெரிவு செய்து அவர்கள் மத்தியில் ஆடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அத்துடன் அதன் ஊடாக விவசாய மக்களது வருமானத்தை உயர்த்துவது மற்றும் போசாக்கினை உயர்த்துவதன் பொருட்டு இல்ல முறையில் கோழி வளர்ப்பின் பொருட்டு கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி என்பவற்றிற்கும் மேலாக மக்களது கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளையும் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு விஷேட வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் அறநெறிப் பாடசாலைகளை (தஹம் பாடசாலை) அபிவிருத்தி செய்வதன் பொருட்டு அந்த பாடசாலைகளுக்குத் தேவையான சகல பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. கணனிப் பயிற்சி நிலையம் ஆரம்பித்தல் மற்றும் அதனூடாக கிரமிய குழந்தைகளுக்கு மத்தியில் தொழில்நுட்பத்தை விருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வகையில் 2012 ஆம் ஆண்டு மேற்குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களின் ஊடாக எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்வதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கு துனை நிற்கும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் பல வெற்றிகரமாக முடிவுருத்துவதன் பொருட்டு எமது அமைச்சின் பொறுப்பாளரான அமைச்சர் பெசில் இராஜபக்ஷ அவர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட, சகல பதவியனியினருக்கும், அதேப் போல் எமது அதிகார சபையின் சகல பதவியனியினருக்கும், உரிய பிரிவுகளின் பதவியனியினர் யாவருக்கும், அதேப் போல் மத்திய மாகாண சகல அமைச்சின் பதவியனியினருக்கும், சகல விதத்திலும் உதவி ஒத்தாசைகள் நல்கிய நிறுவன உத்தியோகத்தர்கள் யாவருக்கும் இவ்வேலையில் நன்றி கூறுவதனையிட்டு நான் பெறுமிதம் அடைகின்றேன்.

**அமரனந்த வீரசிங்க**
தலைவர்.

## பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி



இலங்கை மலையக பிரதேசம் பிரித்தானிய ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டு இருந்த காலத்தின் பின்னர் மலையகப் பிரதேசங்களில் வாழ் மக்களுக்கு ஏற்பட்ட சமூக பொருளாதார மற்றும் ஏனைய பல்வேறு இடர்களின் பொருட்டு அவற்றிற்கு நிலையான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதன் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை அதன் செயற்பாடுகள் மற்றும் வேலை நடவடிக்கைகள் என்பவற்றை அதன் ஆறாவது ஆண்டான 2012 ஆம் ஆண்டிலும் பல்வேறு அபிவிருத்தி கருத்திட்டங்களையும் ஆரம்பித்து அமுலாக்கியது எனலாம். அதிகாரசபைக்கு உரிய வளங்களைப் போலவே பிரதேசத்தில் காணப்படும் வளங்கள் மற்றும் பிரமானங்களை இனங்கண்டு அவற்றினை உச்சப் பயன்படுத்தி விரிவான இலக்குடன் பல்வேறு வேலைத் திட்டங்களையும் செயற்படுத்தி உச்சப் பயன்பாட்டை அடைந்துக் கொண்டது.

அதற்கு அமைய விஷேடமாக வாழ்வாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அதிகாரப் பிரதேசத்திற்கு உரிய ஒவ்வொரு பிரதேசத்திலும் நிலவும் சந்தர்ப்பங்கள், பிரச்சினைகள், பின்னடைந்துள்ள பிரிவுகள், பயனுகாரி குழு, குழு ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக விஷேடமாக கவனத்திற் கொண்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை திட்டமிட்டு அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அபிவிருத்தி செயற்பாடுகளின் ஊடாக 2012 ஆம் ஆண்டு நாட்டில் முன்னுரிமை அபிவிருத்தி வேலைத்திட்டமான "தேசத்தை கட்டி எழுப்புவோம்" (திவி நெகும) வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி சமூகத்தில் சமூக பொருளாதாரம், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ துனை நிற்கின்ற கிராமிய மட்டத்தில் இனங்காணப்பட்ட கருத்திட்டங்கள் பலவற்றினை செயற்படுத்தி மேம்படுத்த இயலுமாக இருந்தது. அங்கு கிராமிய சிறுநீர்ப்பாசன மற்றும் விவசாய வீதி அபிவிருத்தி பல்வேறு சுய தொழில் அபிவிருத்தி என்பவற்றை இணங்கண்டு கொடுத்தல்.

தனிநபரது கல்வி அபிவிருத்தியை விஷேடமாகக் கொண்டு புதிய அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்தல் தற்போது உள்ள அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் முன்பள்ளி அபிவிருத்தி, போதை ஒழிப்பு வேலைத் திட்டங்கள், கலை கலாசார அபிவிருத்தி, எண்ணக்கரு அபிவிருத்திக் கருத்திட்டங்கள், தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டங்கள், வாழ்வாதார வேலைத் திட்டங்களின் அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்கள் பலவும் மிகவும் வெற்றிகரமாகவும் தேவைப்பாட்டுடனும் செயற்படுத்தப்பட்டன எனலாம்.

அதேப் போல் மாவட்டங்கள் 08 இனைக் கொண்டுள்ள அதிகார சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் இதற்கு முன்னய வருடங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட ஆயினும் வேலை முடிவுருத்தப்படாத பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பொருட்டு ஆராய்ந்து 2009, 2010, ஆம் ஆண்டுகளின் கருத்திட்டங்கள் பலவும் முடிவுருத்தப்பட்டதுடன் மீதமாக இருந்த அபிவிருத்தி கருத்திட்டங்களின் நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டு முடிவுருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு அமைய இவ்வதிகார சபையின் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கமானது பிரதேச அபிவிருத்தியை மிகவும் விரைவாக மேற்கொள்வதுடன் கிராமிய பிரதேசங்களில் விரைவான அபிவிருத்தியின் பொருட்டு ஒழுங்கமைக்கப்பட்டு மற்றும் திறனாக மலையக மக்களுக்கு எழுச்சியை ஏற்படுத்தவதற்கு, இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை 2012 ஆம் ஆண்டு மேற்கூறப்பட்ட நோக்கங்களை செயற்படுத்தியது.

**எஸ்.எம்.எஸ்.பீ.சமரகோண்**
பணிப்பாளர் நாயகம்.

# அறிமுகம் மற்றும் வரலாற்று பின்னனி

பிரித்தானியர்களால் கி.பி 1815 இல் மலையக பிரதேசம் கைப்பற்றியதன் பின்னர் பாரம்பரிய மலையக மக்கள் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து பாதுகாக்கப்பட்டு வந்த கலாச்சாரங்கள் அழிவுறும் நிலைக்கு வந்தது. விஷேடமாக கி.பி 1818 இல், 1848 இல் ஏற்பட்ட போராட்டங்களை ஒழித்துக் கொள்வதன் பொருட்டு ஆங்கிலேயரினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கையைப் போன்றே பிரித்தானிய அரசினாலும் சமர்ப்பிக்கப்பட்ட அரச காணிச் சட்டம், சதுப்பு நிலச் சட்டம், முறையற்ற வதிவிடங்களை தவிர்க்கும் சட்டம், காணி அபிவிருத்திச் சட்டம் போன்ற சட்டங்கள் காரணமாக மலையக உழவர் மக்கள் பல இண்ணல்களுக்கு முகம் கொடுக்கலாயினர். அவர்களது சுய பொருளாதாரத்தை அழிப்புச் செய்வதற்கு ஆளாக்கப்பட்டனர். விஷேடமாக 184 இல் 12 ஆம் இலக்க சதுப்பு நிலச் சட்டம் அனுமதி பெறப்பட்டதோடு உழவர் மக்களுக்கு காணிகளின் பொருட்டு எவ்வித உரிமைகளும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உறுதிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்தது. சம்பிரதாய பாரம்பரிய முறைகளுக்கு அமைய மலையக உழவர் மக்கள் நீண்ட காலத்திற்கு பயன்படுத்திய சொந்தக் காணியும் பாரிய அளவில் இச்சட்டத்தின் காரணமாக அவர்களுக்கு உரித்தில்லாது போனது.

மலையக உழவர் மக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்திய பிரித்தானிய நிர்வாகத்தல் மற்றொரு வகைதான் தானிய ஒப்பந்தம். தானிய ஒப்பந்தத்திற்கு உட்படாத நிலங்கள் கையேற்கப்பட்டு ஏல விற்பனை செய்வதற்கு 1866 இன் 5 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தினால் அரசாங்கம் அதன் அதிகாரத்தை வழங்கியது. கோப்பிச் செய்கைக்கு உட்பட்ட காலம் தொட்டு இந்தச் சட்டம் நீண்ட காலமாக செயற்படுத்தப்பட்டதன் காரணமாக வரிச் செலுத்துவதற்கு முடியாது போன உழவர்களிடம் இருந்து அதற்குப் பகரமாக இருந்த காணிகள் பாரிய அளவில் பெதுவுடமையாக்கப்பட்டது. அவ்வாறே மலையக வாழ் மக்கள் மற்றும் மலையக பிரதேசத்தை அறிமுகப்படுத்துவதன் கடினத்தன்மை இடம் வழங்குவதற்கு இடம் கொடுத்து சிறிய உள்ளக மத்திய பிரதேசத்தின் செயற்கை நிர்வாக முறைமையின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இவ்வாறே உரிய பாரம்பரிய பயிர்ச் செய்கை நிலங்களை இழந்த மலையக உழவர் மக்கள் பல்வேறு பொருளாதார இடர்களுக்கும் முகம் கொடுத்தனர். அதன் காரணமாக பொருளாதார சமூக மற்றும் அரசியல் ரீதியில் பின்னடைவு எற்பட்டது. சுதந்திரம் கண்ட இலங்கையில் முதலாவது பிரதம அமைச்சர் கௌரவ டி.எஸ்.சேனாநாயக்க அவர்களினால் ஆங்கில நிர்வாகிகளுடன் வரலாற்று ரீதியான சீர் கேடுகள் பலவற்றிற்கு முகம் கொடுத்து வந்த மலையக உழவர் மக்களது சமூக பொருளாதார மற்றும் கலாச்சார நிலமையை பரீட்சித்துப் பார்த்து அறிக்கை செய்வதன் பொருட்டு 1949 ஜனவரி மாதம் மலையக உழவர் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வாணைக்குழு 1953 ஜனவரி மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சிபாரிசுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மலையக மக்கள் மத்தியில் வறுமை ஒழித்தல் மற்றும் பொருளாதார ரீதியில் உயிர்ப்பித்தல் அதேப் போன்று கலாசார விழுமியங்களை

பாதுகாத்து மலையக உழவர் மக்கள் தொடர்பில் பாரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

உள்நாட்டு விவகார அமைச்சின் உப திணைக்களமாக ஆரம்பிக்கப்பட்ட மலையக உழவர் மறுசீரமைப்பின் பொருட்டு 1958 இல் தொடர்பு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டார். 1964 இல் மீண்டும் அந்த உத்தியோகத்தர் மலையக உழவர் மறுசீரமைப்பு ஆணையாளர் என பெயர் மாற்றம் பெற்றார். பின்னர் 1968 இல் இந்த உப திணைக்களம் ''சீ'' வகுப்புத் திணைக்களமாக உயர்த்தப்பட்டது. 1989 இல் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாச அவர்களது தலைமையில் மலையக உழவர் மறுசீரமைப்பு கருத்திட்ட அமைச்சராக வேறு ஒரு அமைச்சு, அப்போது இருந்த காணி சிறு நீர்ப்பாசன மற்றும் மஹவலி அபிவிருத்தி அமைச்சரவை அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இத்திணைக்களம் 1990 இல் மலையக உழவர் மறுசீரமைப்பு திணைக்களம் பீ வகுப்பிற்கு உயர்த்தப்பட்டது. அத்துடன் புதிய ஒரு பாதையில் சென்று கருத்திட்டங்கள் தயாரிப்பதற்கு மற்றும் அவற்றினை செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டது.

1951 ஆம் ஆண்டு மலையக உழவர் மறுசீரமைப்பு அணைக்குழுவிற்கு அமைய, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்தல் மற்றும் உரிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தவிர்க்கப்பட்டமை போன்றன தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை செய்வதன் பொருட்டு 1994 இல் ஜனாதிபதி ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் ஊடாக வெளியிடப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைக்கு அமைய சுட்டிக்காட்டப்பட்டு இருந்த விடயம் யாது எனில் மலையக உழவர் மறுசீரமைப்புத் திணைக்களம் 1961 முதல் 1994 வரை யிலான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் மூலம் மிகக் கூடுதலான அளவு கிராமிய உட்டகட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டு இருந்தன. அதன் ஊடாக அந்த பிரதேசங்களில் இருந்த சில உட்கட்டமைப்பு வசதிகள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு காரணமாக இருந்த போதிலும் பிரதான நோக்கமான உழவர் மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது இன்னும் கனவாக அமைந்து இருப்பதாகும் என சுட்டிக் காட்டப்பட்டது.


1998 இன் ஐக்கிய தேசிய அபிவிருத்தி தேசிய மக்கள் அபிவிருத்தி அறிக்கைக்கு அமைய கஷ்டப் பிரதேசமாக மலையகத்திற்கு உரிய மாவட்டங்களில் 50% அடைந்து செல்வதனை காணக் கூடியதாக உள்ளது. அவ்வாறே 25% இற்கு மேல் கஷ்டப்படுவது ''மனித இடர் என'' உள்ள மாவட்டங்களாக மலையகத்தில் அமையப் பெற்றுள்ள சகல மாவட்டங்களிலும் காணக் கூடியதாக உள்ளன. மிகவும் குறைந்த மனித அபிவிருத்தி வீதமான 0.649 காணப்பட்டு இருப்பது கண்டி மாவட்டத்தில் ஆகும் (மத்திய இலங்கை அபிவிருத்தி திட்டமிடல் 1994). அவ்வாறே மத்திய பிரதேசத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் மொத்த நாட்டினதும் உற்பத்தியின் 33% இனை விடவும் குறைவானதாகும் (JAICA 1994). அந்த வீதாசாரம் மிகவும் குறைந்த அளவில் மொனராகலை மற்றும் கண்டி மாவட்டங்களில் காணக் கூடியதாக இருந்தது என அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரத்தின் ஊடாக தெளிவாக விளங்குவது யாதெனில் சுதந்திர இலங்கை அதிகாரத்திற்கு வந்ததும் சகல அரசாங்கங்களும் கடந்த 05 தசாப்தங்களில் மலையக பிரதேசத்தில் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் ஊடாக மலையக உழவர் மக்களது வாழ்வை மறுசீரமைத்தல் மற்றும் பின்னடைந்துள்ள மாகாணங்களின் வறுமை ஒழிப்பு மற்றும் பின்னடைவு நிலமை போன்றன நீக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை யாவும் தோல்வி கண்டமை ஆகும். ஆகவே, மலையக கிராமிய பிரதேசங்களில் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு புதிய முறைமைகள் மற்றும் புதிய வழிகாட்டல்கள் உடன் நுழைவதற்கு வேண்டி உள்ளது எனும் அதிக தேவைப்பாட்டிற்கு அமைய இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை 2005 இன் 26 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்பட்டது. மலையக பிரதேசத்தினுள் அபிவிருத்தி கருத்திட்டங்களை இணங்காணுதல், திட்டமிடல், செயற்படுத்துதல் மற்றும் அதற்கு தொடர்பான பயனத்தின் பொருட்டு பல்வேறு திட்டமிடல்கள் பொருட்டு 2005 இன் 26 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபைக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டன.

அதற்கு அமைய இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் அதிகார பிரதேசத்தினுள் பொருளாதார சமூக கலாச்சார மற்றும் சுற்றாடல் அபிவிருத்திகளை விரைவாக மேற்கொள்வதன் பொருட்டு 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இதுவரையில் கருத்திட்டங்கள் பல இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களது தலைமைத்துவம் மற்றும் அனுசரனையின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன. மலையக பிரதேசத்தின் கிராமிய மக்களது ஏழ்மை, வறுமை உள அமைப்பு போன்றவற்றினை முடிவுக்கு கொண்டு வருவதற்காக பிரதானமான பிரமானங்கள் மூன்றின் கீழ் அதாவது உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கல்வி அபிவிருத்தி போன்றவற்றின் கீழ் கருத்திட்டங்கள் பல எமது அதிகார சபையின் ஊடாக வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகின்றன.

# அதிகாரசபையின் அதிகாரப் பிரதேச எல்லை

| தொ.இல | மாகாணம் | மாவட்டம் |
|---|---|---|
| 01 | மத்திய | கண்டி |
| | | மாத்தளை |
| | | நுவரெலியா |
| 02 | சப்ரகமுவ | கேகாலை |
| | | இரத்தினபுரி |
| 03 | ஊவா | பதுலை |
| | | மொனராகலை |
| 04 | கிழக்கு | **அம்பாறை**<br>மஹஓயா, பதியதலாவ மற்றும் லாகுகல பிரதேச செயலாளர் பிரிவுகள் |



## அதிகாரப் பிரதேசத்தின் ஆரம்பத் தரவுகள் தொடர்பான சுருக்கக் குறிப்பு

| தொ.இல | மாகாணம் | மாவட்டம் | பிரதே செயலாளர். பிரிவுகளின் எண். | கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | மத்திய | கண்டி | 20 | 1,188 |
| | | மாத்தளை | 11 | 545 |
| | | நுவரெலியா | 5 | 491 |
| 02 | சப்ரகமுவ | கேகாலை | 11 | 573 |
| | | இரத்தினபுரி | 17 | 575 |
| 03 | ஊவா | பதுலை | 15 | 567 |
| | | மொனராகலை | 11 | 319 |
| 04 | கிழக்கு | அம்பாறை | 20 | 503 |
| | **மொத்தம்.** | | **110** | **4,761** |

அம்பாறை மாவட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவுகள் 20 இல் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் அதிகார பிரதேசத்திற்கு உரிய பிரதேச செயலாளர் பிரிவுகள் 03 மாத்திரமே ஆகும்.

## பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசம்

அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டிய அதிகார பிரதேசங்களாக கண்டி மாவட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் 2009 ஆம் ஆண்டு முதல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. ஹதரலியத்தை
2. கலகெதர
3. ஹாரிஸ்பத்துவ
4. பூஜாபிடிய
5. அகுரனை



## பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் புள்ளிவிபர அறிக்கை

| தொ. இல | பிரதேச செ.பி. | விஸ்தீரம் ச.கி.மீ | பிரிவுகளது எண் | கிராமங்களின் எண். | மொத்த சனத்தொகை | குடும்பங்களின் எண். | சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களின் எண். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஹதரலியத்தை | 62.00 | 57 | 112 | 31650 | 9802 | 3400 |
| 2 | கலகெதர | 54.00 | 67 | 141 | 39620 | 10548 | 3512 |
| 3 | ஹாரிஸ்பதுவ | 59.00 | 84 | 148 | 92007 | 23501 | 8043 |
| 4 | பூஜாபிடிய | 50.40 | 67 | 120 | 62477 | 15285 | 5275 |
| 5 | அகுரனை | 31.30 | 35 | 113 | 66759 | 13491 | 5221 |
| | **மொத்தம்.** | 256.70 | 310 | 634 | 292513 | 72627 | 25451 |

## பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் புள்ளிவிபர அறிக்கை

| தொ.இல | பிரதேச செயலாளர் பிரிவு | பாடசாலை | பன்சலை | | பள்ளி | | கோயில் | கலை நிறுவன எண். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பாடசாலைகளின் எண்ணிக்கை | பன்சலை எண். | அறநெறி பாடசாலைகளது எண். | முஸ்லீம் பள்ளி | கிறிஸ்தவர் ஆலயம் | | |
| 1 | ஹதரலியத்தை | 22 | 31 | 31 | 2 | - | 1 | 6 |
| 2 | கலகெதர | 20 | 36 | 28 | 3 | 2 | - | 5 |
| 3 | ஹாரிஸ்பதுவ | 28 | 65 | 55 | 11 | - | - | 14 |
| 4 | பூஜாபிடிய | 29 | 59 | 44 | 13 | 1 | 2 | 4 |
| 5 | அகுரனை | 26 | 16 | 17 | 57 | - | 6 | 1 |
| **மொத்தம்.** | | **125** | **207** | **175** | **86** | **3** | **9** | **30** |

**அதிகாரசபையின் பிரதான அபிவிருத்தி வகுதிகள்**

**(1) வாழ்வாதார அபிவிருத்தி**

**(2) உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி**

**(3) கல்வி அபிவிருத்தி**

# முகாமைத்துவச் சபை

## 01. அறிமுகம்

2005 இன் 26 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கு அமைய அதிகார சபையின் நோக்கங்கள் யாவற்றையும் செயற்படுத்தி மேம்படுத்துவதற்கு தேவையான அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் செயற்பாடுகள் என்பன இம்முகாமைச் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

## 02. முகாதைத்துவச் சபையின் கட்டமைப்பு (சட்டத்தின் முதலாவது அத்தியாயத்தின் நான்காம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய)

i ***உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினர்களின் நியமன எண்ணிக்கை மூன்று (03)***
(மலையக அபிவிருத்தி அதிகார சபையின் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர், திரைசேரியின் பிரதிச் செயலாளர் நிலையில் உள்ள உத்தியோகத்தர், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் பெயர் குறிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவர்)

ii. ***உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்கள் ஐந்து (05)***
(விடயப் பொறுப்பு அமைச்சரது சிபாரிசின் கீழ் ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்)

## 03. முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்கள் 2012 ஆம் ஆண்டு

| தொ இல | உறுப்பினர்களது பெயர் | உறுப்புரிமையின் தன்மை | | நியமனத் திகதி | நீங்கிய திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.அமரனாந்த வீரசிங்க | உத்தியோகப் பற்றற்ற | தலைவர்/முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2008.12.31 | - |
| 02 | திரு.எஸ்.ஆர்.கரனாரத்ன | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2010 .08.19 | - |
| 03 | திரு.அசங்க பண்டார தொடங்வல | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2010 .08.19 | 2012.01.09 |
| 04 | திரு.அப்துல் வாஹிட் முஹம்மத் | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2010 .08.19 | - |
| 05 | திரு.சோல்டர் ரனசிங்க | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2010 .08.19 | - |
| 06 | திருமதி.கே.ஜி.கே.விமலவீர | உத்தியோகப்பற்றுள்ள | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2010 .09.15 | - |
| 07 | திரு.எச்.எம்.காமினி செனவிரத்ன | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2012.07.16 | - |
| 08 | திரு.எஸ்.சனத் சேனாதீர | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2012.07.16 | - |

## 04. முகாமைத்துவ சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தேவையான சகல தீர்மானங்களை மேற்கொள்ளவும், முகாமைத்துவம் செய்தல் போன்ற சகல விடயங்கள் பொருட்டும் 2005 இன் 26 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் முதலாவது பந்தி மற்றும் இரண்டாவது பந்தியின் கீழ் விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வதிகாரங்களுக்கு அமைய மலையகப் பிரதேசத்தினுள் உற்பத்தி இயலுமையை மேம்படுத்துதல், வருமானத்தை அதிகரித்தல், வேலை வாய்ப்பை உருவாக்கல் போன்றவை மற்றும் பொருளாதார சமூக கலாசார மற்றும் சூழல் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குத் தேவையான அபிவிருத்திக் கருத்திட்டங்களை இணங்காணுதல், திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் இணைப்புச் செய்தல் போன்ற பல்வேறு திட்டமிடல்கள் தொடர்பிலும் திட்டமிடுவதற்கான அதிகாரம் முகாமைத்துவச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அதிமேன்மைதகு ஜனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு இம்முகாமைத்துவச் சபை அமையப் பெற்றுள்ளது. அங்கு உறுப்பினர்களது எண்ணிக்கை 08 ஆகும். சட்டத்தின் முதலாவது பந்தியின் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினர்களது எண்ணிக்கை மூவறும், உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் ஐவரும் முகாமைத்துவச் சபையில் இருப்பர். அதற்கு அமைய உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினர்களுள் விடயப் பொறுப்பு அமைச்சரது அமைச்சின் செயலாளர், திறைசேரியை பிரதி நிதித்துவப்படுத்தும் பிரதிச் செயலாளர் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், மற்றும் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் உள்ளடங்குவர். உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் ஐவருள் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரது சிபாரிசின் பேரில் ஜனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

## 05. முகாமைத்துவச் சபையினால் 2012 ஆம் ஆண்டு மேற்கொண்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் மீளாய்வுக் குறிப்பு

2012 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவச் சபை ஒன்று கூடல்கள் 10 இடம் பெற்றது. இவ்வொன்று கூடல்களின் போது விஷேடமாக கவனம் செலுத்தப்பட்டு இருப்பது அதிகார சபையின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்வதன் பொருட்டு தேவையான ஒழுங்கு விதிகளை அனுமதித்துக் கொள்வதற்கும் மற்றும் அதிகார சபைக்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக் கொள்வதன் பொருட்டும் தேவையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

- நிதிப் பிரமானங்களுக்கு அமைய செலவுகளை மேற்கொள்ளல் மற்றும் அதிகார பகிர்வை அனுமதித்தல்.
- 2012 ஆம் ஆண்டின் பொருட்டு அபிவிருத்தி திட்டமிடலை அனுமதித்துக் கொள்ளல்.

- 2012 ஆம் ஆண்டு மாதாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற மீண்டு வரும் மற்றும் மூலதன மற்றும் பல்வேறு வகையான வருமான அறிக்கைகளை அனுமதித்துக் கொள்ளல்.
- 2012 ஆம் ஆண்டு பேராதனை செடி சந்தைப்படுத்தல் நிலையத்தின் மாதாந்த விற்பனை மற்றும் இலாப நட்டக் கணக்குகளை சமர்ப்பித்தல்.
- சுழல் நிதியை அறவிட்டுக் கொள்ளல்.
- முடிவுறா வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல்.
- கால்நடை வள அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2012.
- அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- 2012 ஆம் ஆண்டின் பொருட்டு பொருட் கொள்வணவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மீளாய்வுக் குழு என்பவற்றை நியமனம் செய்தல்.
- முடிவுறா மற்றும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளை முடிவுருத்துதல்.
- வெற்றிடம் நிலவும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.

# நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

*(2005 இன் 26 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் II ஆவது அத்தியாயத்திற்கு அமைய)*

அ).அதிகார எல்லையினுள் உற்பத்தி இயலுமையை மேம்படுத்துவதற்கு பொருளாதார, சமூக, கலாசார மற்றும் சூழல் அபிவிருத்தியை மேம்படுத்தும் பொருட்டும் மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதைப் போலவே வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தினுள் அபிவிருத்தி கருத்திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல்

ஆ).செயற்படுத்தப்படுகின்ற அதிகார பிரதேச எல்லையினுள் மொத்த அபிவிருத்தியையும் திட்டமிடுதல் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பில் விபரமாக ஆராய்ந்து அறிதல்.


இ). வரலாற்று ரீதியான மற்றும் வேறு காரணங்களினால் பின்தங்கியுள்ள சமூகத்தை இணங்கண்டு மற்றும் அவர்களது சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு ஆலோசனைகள் தயாரித்தல், நிதிகளை ஒன்று திரட்டல் மற்றும் கருத்திட்டங்களின் செயற்பாட்டை மேம்படுத்துதல்

ஈ). கண்டி நகரத்தில் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட மற்றும் தேசிய மட்டத்தில் அங்கு காணப்படும் கலாசார மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தை கவனத்திற் கொண்டு, கண்டி நகர மற்றும் உரிமை, கலாசார நிறுவனங்கள் சூழல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை பாதுகாப்பது போன்ற விடயங்களில் இதன் விஷேட கவனத்தை செலுத்துதல்.

உ). ஏதாவது பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தினுள் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதனை ஆராய்கின்ற போது மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களை இனங்காணும் போது, ஆய்வு செய்கையின் போது மற்றும் செயற்படுத்துகின்ற போது அரசாங்க, அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்கள் மற்றும் தனியார் துரையினர் போன்றோரின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளுதல்.

ஊ). ஏதாவது பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தினுள் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதனை விபரமாக ஆராய்கின்ற போது அபிவிருத்தி கருத்திட்டங்களை ஆராய்கின்ற போது மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துகின்ற போது உள்நாட்டு வெளிநாட்டு மற்றும் தனியார் துரையினரதும் பிரதிநிதிகளின் பங்குபற்றுகையினையும் பெற்றுக் கொள்ளுதல்.

## நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் பதவியணியினர்



## பதவியனியினர் விபரம்

இலங்கை மலையக அபிவிருத்தி சபையின் நோக்கங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதன் பொருட்டு முகாமைத்துவச் சேவை திணைக்களத்தினால் 2006 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டுள்ள பதவியனியினரது எண்ணிக்கை 33 ஆகும். 2007 ஆம் ஆண்டு நிறுவனத்திற்கு தேவையான பதவியனியினர் எண்ணிக்கை 17 இன் பொருட்டு மீண்டும் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதற்கு அமைய மொத்த ஊழியர் எண்ணிக்கை 50 ஆகும். இறுப்பினும் 2012 ஆம் ஆண்டாகின்ற போது இவ்வதிகாரசபையின் பதவியனியினர் வருமாரு அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை நிறுவனப் பதவியனியினர்**

| தொ. இல | பதவி | மு.சே.தி.அனுமதிக்கப்பட்டள்ள பதவியனியினர் | தற்போது சேவையில் உள்ளொர் | ஏனைய |
|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 2012/04/23 கேட்டு விலகியுள்ளார் . |
| 2 | பணிப்பாளர் (அபிவிருத்தி) | 1 | 1 | 2012/04/23 சேவை முடிவுருத்தப்பட்டுள |
| 3 | பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) | 1 | 1 | - |
| 4 | பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 1 | 1 | - |
| 5 | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 1 | 0 | வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். |
| 6 | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 1 | 0 | - |
| 7 | உதவிப் பணிப்பாளர் (கால்நடைவளம்) | 1 | 1 | - |
| 8 | கட்டடப் பொறியியலாளர் | 2 | 1 | - |
| 9 | கணக்காளர் | 2 | 0 | - |
| 10 | நிர்வாக உத்தியோகத்தர் | | | |
| 11 | நிதி உதவியாளர் | 3 | 2 | - |
| 12 | அபிவிருத்தி உதவியாளர் | 1 | 1 | - |
| 13 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் I | 1 | 0 | - |
| 14 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 4 | 3 | - |
| 15 | முகாமை உதவியாளர் | 13 | 12 | ஒருவர் வேலை நீக்கம் செய்யப்ட்டுள |
| 16 | சாரதி | 8 | 8 | - |
| 17 | அலுவலக உதவியாளர் (I, II, III) | 5 | 5 | - |
| 18 | அலுவலக தொழிலாளர் | 3 | 3 | - |
| **மொத்தம்** | | **50** | **40** | |

# நிர்வாகப் பிரிவு

2005 இன் இலக்கம் 26 இனைக் கொண்ட சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகப் பிரிவினால் நிறுவனத்தின் சகல மனித வளம் மற்றும் பௌதீக வளம் முறையாக முகாமைத்துவம் செய்வதன் பொருட்டு தேவையான பங்களிப்பை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கி பொறுப்புச் சொல்கின்றது. அத்துடன் 2012 ஆம் ஆண்டும் இவ்வாறே இச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கு அமைய நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதன் பொருட்டு பதவியனியினரது முன்னுரிமை மற்றும் திறமை என்பவற்றை மேம்படுத்துவது மற்றும் தேவையான வழிகாட்டல்கள் நிர்வாகப் பிரிவின் ஊடாக வழங்கப்பட்டன.

எவ்வாறாயினும் வேறு நிறுவனங்களில் பௌதிக வள முகாமை மேற்கொள்கின்ற போது 2011 ஆம் ஆண்டு இறுதிக் காலண்டின் போது எமது அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற கெப் வாகனம் மற்றும் மோட்டார் வாகனத்துடன் 2012 ஆம் ஆண்டு ஆரம்பமானது. அப்போது இவ்வதிகார சபையில் காணப்பட்ட வாகன தொகை 12 ஆகக் காணப்பட்டது. இவ்வாகனங்களுள் 07 வாகனங்கள் இலங்கை மலையக அபிவிருத்தி சபைக்கு உரியது. ஐக்கிய நாட்டு உணவு விசவசாய வேலைத் திட்டத்திற்கு உரிய 32-5451 ஜீப் வாகனம் 2012 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இவ்வதிகார சபை பொறுப்பேற்றதுடன் அதற்கு அமைய வாகனங்களின் எண்ணிக்கை 08 ஆக அதிகார சபைக்கு உரித்தானதாக இருந்தது. “ஜாதிக சவிய, கம நெகும” வேலைத் திட்டத்தின் கீழ் தேவையான பின்னூட்டல்கள் நடவடிக்கை மேற்கொள்வதற்கு வேறான அதிகாரப் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 310 இன் அபிவிருத்தி நடவடிக்கைகள் பின்னூட்டம் செய்தல் மற்றும் உரிய விடயங்கள் பொருட்டு மற்றும் முடிவறா கருத்திட்டங்களை முடிவுருத்துவதன் பொருட்டு தேவையான பின்னூட்டல் நடவடிக்கைகளின் பொருட்டு உத்தியோகத்தர்ளுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் பெற்றுக் கொடுப்பதற்கும் நிர்வாகப் பிரிவின் முதன்மையான விடயமாகும்.

நிறுவனத்தின் தேவைப்பாட்டுக்கு அமைய 2012 ஆம் ஆண்டு தேவையான மொத்த பொருட் கொள்வனவு திட்டமிடல் தயாரித்தல் மற்றும் அதன் பொருட்டு தேவையான வழங்குனர்களை பதிவு செய்தல் போன்ற விடயங்கள் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

நிறுவனத்தின் அபிவிருத்திப் பிரிவின் பொறியியல் பிரிவிற்கு உரிய சகல உட்கட்டமைப்பு வசதிகளும் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கல்வி அபிவிருத்தி மேற்கொள்வதன் பொருட்டு தேவையான சகல வளங்களும் முறையாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு உத்தியோகத்தர்களின் பொருட்டு முறையான பயிற்சி திட்டமிடல் தயாரித்து இந்த அதிகார சபையின் ''திவி நெகும'' அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஈர்ப்புச் செய்ததன் காரணமாக நிறுவனத்தினுள் உத்தியோகத்தர்களது பயிற்சி நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் விஷேட செயற்பாடான முகாமைத்துவச் சபையின் ஒன்று கூடலில் நடவடிக்கைகள் நிர்வாக பிரிவின் ஊடாக ஒழுங்கமைப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கு அமைய 2012 ஆம் ஆண்டு முகாமைத்துவச் சபையின் ஒன்று கூடல்கள் 10 இடம் பெற்றது. அதிகார சபையின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் முறைப்படுத்துவதன் பொருட்டு தேவையான அனுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் ஊடாக அத்தியவசியமான மனித வளம் மற்றும் பௌதீக வளம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான தீர்மானங்கள் முகாமைத்துவச் சபையால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

அதற்கு அமைய அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்துகின்ற போது நிதிப் பிரமானங்களுக்கு அமைய அதிகாரங்கள் பண்முகப்படுத்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டினுள் அபிவிருத்தி திட்டமிடல் அனுமதித்துக் கொள்ளல் மீண்டு வரும் மூலதன மற்றும் பல்வேறு வருமான அறிக்கைகள் அனுமதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது முடிவுறா கருத்திட்டங்களின் பின்னூட்டம் செய்தல் கால்நடை வள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்துதல் முடிவுறா மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்ட சேலைத் திட்டங்களை முடிவுருத்துதல் மற்றும் வெற்றிடமாகியுள்ள பதவிகளின் பொருட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல் போன்றவற்றிற்கு முகாமைத்துவச் சபையின் விஷேட கவனம் செலுத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அதற்கும் மேலாக நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள வழக்குகள் முறையாக நடாத்துவதற்கும் அதற்கு அமைய தேவையான ஆவணங்கள் தயாரிக்கவும் முகாமைத்துவச் சபையினால் அனுமதிக்கப்பட்டு சட்ட குழு ஒன்றின் ஊடாக உரிய வழக்கின் பொருட்டு நிறுவனம் சார்பில் முன்நிற்கவும் நிறுவாகப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இதற்கு அமைய நிறுவனத்தின் முழு நிர்வாகத்திற்கும் தேவையான மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானத்திற்கு அமைய நிறுவனத்திற்கு செயற்பாட்டின் பொருட்டு 2012 ஆம் ஆண்டின் நிர்வாகப் பிரிவின் ஊடாக அதிகார சபையின் நோக்கத்தை அடைந்துக் கொள்வதற்கு நேரடியான பங்களிப்பை வழங்குவதற்கு அந்த விடயங்களை செயற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குவதற்கு இயலுமாக உள்ளது.

# நிதி மற்றும் முகாமைத்துவப் பிரிவு

**2012 ஆம் ஆண்டின் பொருட்டு இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் ஐந்தொகை மற்றும் வருமான செலவுக் கணக்கு**

**2012 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று உள்ளவாறான ஐந்தொகை**

| | **2012** | **2011** |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| **சொத்துக்கள்** | | |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள | 26,091,594.53 | 28,566,391.59 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | |
| கையிருப்பு | 240,415.88 | 411,838.45 |
| நிலையான வைப்புக்கள் | 8,177,224.21 | 5,863,157.13 |
| பல்வேறு கடன் படுனர் | 826,178.74 | 203,550.00 |
| கிடைக்கப்பட வேண்டிய வைப்புக்ள் | | |
| கிடைக்க வேண்டிய சுழல் நிதி | 8,374,868.60 | 6,151,455.01 |
| முற்பணம் - ஒப்பந்தம் | 1,444,210.42 | |
| கிடைக்க வேண்டியவ வட்டி | 41,263.78 | |
| கொண்டாட்ட முற்பணம் | 32,000.00 | 55,000.00 |
| காசு மீதி - i | 7,271,813.86 | 53,513,849.01 |
| காசு மீதி - ii | 472,340.31 | 953,829.51 |
| சேமிப்புக் கணக்கு | 1,601,728.93 | |
| வைப்புக்கள் | - | |
| பல்வேறு நிதிக் கணக்கு | 500,000.00 | |
| **மொத்த சொத்துக்கள்** | **55,073,639.26** | **146,834,761.07** |
| **நடைமுறை பொறுப்புக்ள்** | | |
| மிதக்கவிடல் | 1,513,898.74 | 1,082,489.78 |
| இடர் ஒதுக்கீடு | 2,432,882.15 | 895,152.50 |
| நாளாவித செலவுகள் | 65,489.26 | 636,650.85 |
| பல்வேறு கடன் கொடுனர் | | |
| மிதக்கவிடல் வரி | 5,750.00 | 4,400.00 |
| செலுத்த வேண்டிய முடிவறா | 1,228,780.31 | 50,127,342.70 |
| செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,540,000.00 | 1,565,000.00 |
| ஊழியர் பினை வைப்புக்கள் | - | 60,500.00 |
| கணக்காய்வு கட்டனம் | 800,000.00 | |
| செலுத்த வேண்டிய சுழல் நிதி | 19,903.50 | |
| **மொத்த பொறுப்புக்கள்** | 7,606,703.96 | **54,371,535.83** |
| **தேறிய சொத்துக்கள்** | **47,466,935.30** | |
| **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | | |
| அரச ஒதுக்கீட்டுக் கணக்கு | 26,306,684.12 | 28,944,324.92 |
| மிகை குறை | 21,160,251.18 | 63,518,900.32 |
| | **47,466,935.30** | **92,463,225.24** |

**வருமான செலவுக் கூற்று**

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| **நன்கொடை கிடைப்பனவு** | | |
| திறைசேரி - மூலதனம் | - | 213,787,035.00 |
| மீண்டெழும் | 20,640,000.00 | 22,908,190.00 |
| பல்வேறு வருமானங்கள் | 2,263,667.64 | 1,338,661.85 |
| அரச ஒதுக்கீட்டு கணக்கு | 2,624,306.45 | 3,076,506.17 |
| சுழல் நிதி | - | 1,009,470.00 |
| **மொத்த கிடைப்பனவு** | **25,527,974.09** | **242,119,863.02** |
| **கண்கானிப்புச் செலவு** | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 16,628,868.94 | 15,491,867.68 |
| போக்குவரத்து செலவு | 268,466.25 | 385,272.59 |
| வழங்கள்கள் மற்றும் ஏனைய | 1,673,141.86 | 1,591,099.62 |
| பராமரிப்புச் செலவு | 1,651,980.99 | 3,612,108.77 |
| ஒப்பந்த சேவைகள் | 1,162,622.18 | 1,331,050.98 |
| மீதி | 2,624,306.45 | 3,076,506.17 |
| ஏனைய கண்கானிப்புச் செலவுகள் | 5,926,224.80 | 3,072,808.46 |
| அபிவிருத்திச் செலவுகள் | 34,362,613.65 | 207,879,862.15 |
| **மொத்த கண்கானிப்புச் செலவு** | **64,298,225.12** | **236,440,576.42** |
| மேலதிகம் குறைவு – கண்கானிப்பு | -38,770,251.03 | 5,679,286.60 |
| மி.கி.கொ வந்தது | 59,930,502.21 | 57,839,613.72 |
| மொத்த மேலதிகம் குறைந்த | **21,160,251.18** | **63,518,900.32** |

2012 ஆம் ஆண்டு நிதி முகாமைத்துவப் பிரிவின் ஐந்தொகை தயாரிக்கையில் சொத்துக்களின் அளவு மற்றும் உபகரணங்களின் மதிப்பீட்டில் குறைவு ஏற்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு பொருள் ஏல விற்பனையின் மூலம் ரூபா 118,703.00 சொத்துக்கள் விற்பனையும். 2012 அம் ஆண்டு மீதி ரூபா மில்லியன் 2616 ஆக காணப்பட்டமை இதற்கு காரணமாகும். 2012 ஆம் அண்டு எந்தவொரு நிலையான சொத்துக்களும் கொள்வணவு செய்யப்படவில்லை.

இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் சுழல் நிதியின் ஊடாக நடாத்திச் செல்லப்படுகின்ற நிலையான வைப்புக்கள் ரூபா மில்லியன் 583 இல் 2011 ஆம் ஆண்டு முடிவடைகின்ற போது காணப்பட்டதுடன் அது 2012.12.31 ஆம் திகதி ஆகின்ற போது ரூபா மில்லின் 542 ஆகும். 2012 ஆம் ஆண்டினுள் இந்த நிலையான வைப்புக்கு புதிதாக ருபா மி 2563 நிதி தொகை செலவு வைக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு மீண்டு வரும் ஒதுக்கீடுகளில் குறையை செலுத்துவதன் பொருட்டு ரூபா மில்லியன் 3 முகாமைத்துவச் சபையின் அனுமதியின் கீழ் இந்த நிலையான வைப்புக்களில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறே கொடை நிதி ஒதுக்கீடு செய்தல் சார்பாக மற்றும் கடுகண்ணாவை வர்த்தக கட்டடத் தொகுதியில் கடை அறை உரிமையாளர்களது வைப்பு நிதி சார்பில் புதிய நிலையான வைப்புக்கள் 2 ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் அதற்கு அமைய 2012.12.31 ஆம் திகதி ஆகின்ற போது மொத்த நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா மில்லியன் 8177 ஆகும்.

## இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய நிலையான வைப்புக்கள் வருமாறு.

சுழல் நிதி ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையான வைப்பு - ரூ.மி 5.426

கடுகண்ணாவை சந்தை தொகுதி வைப்பு நிதி - ரூ.மி 1.649
ஆரம்பித்து வைத்த நிலையான வைப்பு

கொடை கொடுப்பணவு பொருட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட
நிலையான வைப்பு - ரூ.மி. 1.101


## மீண்டுவரும் செலவு

2011 ஆம் ஆண்டின் பொருட்டு இணக்கம் செய்யப்படும் போது மீண்டு வரும் செலவினங்கள் ரூபா காட்டப்படுகின்ற போது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாரு.

### மீண்டுவரும் செலவு – 2012 மற்றும் 2011

| தொ.இல | விபரம் | 2012 | % | 2011 | % |
|---|---|---|---|---|---|
| 1 | ஆளுக்குரிய வேதனாதிகள் | 16,628,868.94 | 60.89 | 15,491,867.68 | 60.79 |
| 2 | போக்குவரத்துச் செலவு | 268,466.25 | 0.98 | 385,272.59 | 1.51 |
| 3 | வழங்கள்கள் மற்றும் சேவைகள் | 1,673,141.86 | 6.13 | 1,591,099.62 | 6.24 |
| 4 | பராமரிப்பு | 1,651,980.99 | 6.05 | 3,612,108.77 | 14.17 |
| 5 | ஒப்பந்த சேவைகள் | 1,162,622.18 | 4.26 | 1,331,050.98 | 5.22 |
| 6 | ஏனைய கண்கானிப்பு செலவுகள் | 5,926,224.80 | 21.70 | 3,072,808.46 | 12.06 |
| | மொத்தம் | **27,311,305.02** | **100.00** | **25,484,208.10** | **100.00** |

**மீண்டுவரும் செலவுகள் -2012**




ஆளுக்குரிய வேதானாதிகள் தொடர்பில் கவனத்திற் கொள்கின்ற போது 2011 ஆம் ஆண்டு ஏறத்தாள ரூ.மி 1.137 அதிகரிப்பை காணக் கூடியதாக இருந்தது. கொடை கொடுப்பணவுக்காக ரூ.மி 1.537 நிதி தொகை ஒதுக்கப்பட்டதுடன் குறிப்பிடுவது இந்த அதிகரிப்பிற்கு மூல காரணமாகும். 2012 ஆம் ஆண்டு அபிவிருத்தி கருத்திட்டங்கள் செயற்படுத்தாததன் காரணமாக போக்குவரத்து செலவுகளில் குறைபாடு காணப்படக் கூடியதாக இருந்தது. அவ்வாறே பொருட்கள் மற்றும் சேவைகள் விலை மனுக்கள் அதிகரித்துக் காணப்பட்டதன் காரணமாகவும் வழங்கள் சேவைகளின் செலவு 2011 ஆம் ஆண்டு ஏறத்தள ரூபா 824200 இனால் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஏனைய கண்காணிப்பு செலவுகளில் ரூ.மி 2853 அதிகரித்துச் சென்றமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஊழியர் நம்பிக்கை நிதியில் ரூ.மி 25 நிலுவை தொகையும் செலுத்தியமை இதற்கு காரணமாகும்.

அவ்வாறே மீண்டு வரும் செலவின் பொருட்டு 2011 ஆம் ஆண்டு ரு.மி 229 நிதி தொகை கையிருப்பாக கிடைக்கப் பெற்றதுடன் 2012 ஆம் ஆண்டு மீண்டு வரும் கையிருப்பாக கிடைக்கப் பெற்றிருப்பது ரூ.மி 20.64 ஆகும். அது 2011 ஆம் ஆண்டிற்கான ஏறத்தாள ரூ.மி 2268 குறைந்துள்ளது. வீதாசாரமாக எடுத்து கூறுகையில் 9.9% ஆகும்.

மூலதன செலவு தொடர்பில் கவனத்திற் கொள்கின்ற போது 2012 ஆம் ஆண்டு பொருட்டு மூலதன ஒதுக்கீடு ஆக ரூ.மி 50 அனுமதிக்கப்பட்டு உள்ளதுடன் 2012 ஆம் ஆண்டின் பொருட்டு மூலதன கையிருப்பாக ரூ.மி. 50 அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டு பொருட்டு மூலதன கையிருப்பாக எந்த ஒரு நிதித் தொகையும் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற வில்லை.

2012.12.31 ஆம் திகதி அன்று வருமானச் செலவுக் கூற்று அபிவிருத்திச் செலவாக குறிப்பிடப்பட்டு இருப்பது 2011 ஆம் ஆண்டு கருத்திட்டத்தின் பொருட்டு செலுத்தப்பட்ட

நிதி மற்றும் நிர்வாகச் செலவு ஆகும். 2012 ஆம் ஆண்டின் பொருட்டு புதிய கருத்திட்டம் ஏதும் செயற்படுத்த வில்லை.

அவ்வாறே 2012 ஆம் ஆண்டு முடிவுறாத மற்றும் விஷேட கருத்திட்டங்களின் பொருட்டு அதிகார சபையின் 2011.12.31 ஆம் திகதி அன்று இடம் பெற்ற ஆரம்ப நிதி மீதி செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டு செலவு செய்யப்பட்ட முடிவறா கருத்திட்டங்கள் மற்றும் விஷேட கருத்திட்டங்கள் பின்வருமாரு.

**<u>முடிவுறா கருத்திட்டங்கள்</u>**

| தொ.இல | கருத்திட்டங்கள் | தொகை ரூ.மி. |
|---|---|---|
| 1 | விவல பாலம் நிர்மானித்தல் | 4,399,124.35 |
| 2 | உடுவ நிர்மானம் | 60,000.00 |
| 3 | உடவெலிகெடிய அமுனுவெல பாலம் நிர்மானம். | 9,472.23 |
| 4 | போகஹகும்புர தென்னேகும்புர பாலம் நிர்மானம் செய்தல் | 2,063,787.30 |
| 5 | அகுரனை சின்னோடை பாலம் நிர்மானித்தல் | 9,472.23 |
| 6 | கியராகிடிய ஹொரேகொடை நாகஹமுல பாலம் நிர்மானித்தல் | 1,014,860.04 |
| 7 | நவதிஸ்பனே பல்தொகுதி கட்டட நிர்மானம் | 792,396.01 |
| 8 | மல்லன்த பல்தொகுதி கட்டம் நிர்மானம் | 845,086.42 |
| 9 | விவல பாலம் இரு பக்கமும் நுழைவு வீதி நிர்மானம். | 195,174.65 |
| 10 | மாவெல சனசமூக நிலையம் | 423,746.59 |
| 11 | உடவெலிகெடிய அமுனொவெல பாலம் நுழைவு வீதி நிர்மானம். | 9,472.23 |
| **மொத்தம்.** | | **9,822,592.05** |

**<u>விஷேட கருத்திட்டம்</u>**

| தொ.இல | கருத்திட்டங்கள் | தொகை ரூ.மி. |
|---|---|---|
| 1 | கலகெதர மலசலகூட தொகுதி நிர்மானம் | 1,298,879.34 |
| 2 | கடுகண்ணாவை | 666,128.78 |
| **மொத்தம்** | | **1,965,008.12** |

2012 ஆம் ஆண்டு வருமானம் தொடர்பாக கவனத்திற் கொள்கின்ற போது 2012 ஆம் ஆண்டின் பொருட்டு வருமானம் ரூ.மி 1.411 ஆகும். அது 2011 ஆம் ஆண்டு ஏறத்தாள ரூபா 0.437 இனால் அதிகரித்து உள்ளது. அதன் சதவீதமானது 44.82 ஆகும். கடை அறைகளது கூலி மற்றும் வருமானம் என்பன எழுந்த அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது

## பல்வேறு வருமானங்கள் - 2012

| தொ.இல | கருத்திட்ட வருமானம் | 2012 | 2011 |
|---|---|---|---|
| 1 | கடை அறை கூலி கடுகண்ணாவை வர்த்தக கட்டட தொகுதி | 573,600.00 | 528,200.00 |
| 2 | கடை அறை கூலி – பெரகல பொருளாதார நிலையயம். | 64,800.00 | 64,800.00 |
| 3 | வாடகை வருமானம் -அகுரனை பால் விற்பனை நிலையம் | 8,800.00 | 44,400.00 |
| 4 | வாடகை வருமானம் -ஹதரலியத்த பால் விற்பனை நிலையம். | 19,000.00 | 16,700.00 |
| 5 | வாடகை வருமானம் பெலிஹூல் ஓயா கிமன்ஹல | 19,100.00 | 17,532.12 |
| 6 | திவி நெகும நாற்று விற்பனை நிலையம் | 135,615.38 | 77,695.00 |
| 7 | வழங்குனர்களது பதிவு | 98,125.00 | 120,500.00 |
| 8 | மீளச் செலுத்தாத விலை மனு வைப்பு | 18,500.00 | - |
| 9 | பொருள் ஏல விற்பனை வருமானம் | 77,153.27 | 63,265.20 |
| 10 | பத்திரிகை விற்பனை வருமானம் | 6,497.00 | 2,347.00 |
| 11 | மிதக்கவிடப்பட்ட வருமானம் (ஒப்பந்தம்) | - | 34,303.60 |
| 12 | தண்டப் பணம் | 387,211.04 | - |
| 13 | வேறு வருமானங்கள் | 2,808.00 | 4,727.00 |
| மொத்தம் | | **1,411,209.69** | **974,469.92** |

## 2012 ஆம் ஆண்டு நிதிப் பிரிவின் ஊடாக மேறகொள்ளப்பட்ட விடயங்கள்.

- நி.பி 66 இற்கு அமைய திருத்தம் செய்வது தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிப்பதற்கு அனுமதி கோரல்.
- கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் 03 இடம் பெற்றமை.
- வருமான செலவு பொருட்டு தொடர் இலக்கம் பயன்படுத்துதல் பொருட்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அனுமதித்துக் கொள்ளல்.
- கொடை வழங்குவதன் பொருட்டு நிதி ஒன்றை ஸ்தாபித்தல் மற்றும் அதன் ஊடாக நிலையான வைப்பு ஒன்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- கடுகண்ணாவை வர்த்தக கட்டடத் தொகுதியில் ஒப்பந்ததாரரது உரிமையாளர்களது வைப்பு நிதியின் ஊடாக நிலையான வைப்பு ஒன்றினை ஆரம்பித்து வைத்தல்.
- கணக்கு அலகில் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் சுழல் நிதிகளின் மீதிகளில் வேறுபாடு நிலவுவதன் காரணமாக அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்களது பங்குபற்றுகையுடன் சுழல் நிதி மீதியில் செம்மையாக்கள் மேற்கொண்டு மீதியை கணக்கிடல்.

# அபிவிருத்தி அலகு

இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய மொத்த அதிகாரப் பிரதேசத்திலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசங்களில் ஹுதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய மற்றும் அகுரனை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் குறைந்த வருமானம் பெறுவோரது பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதன் பொருட்டு பொருளாதார வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை சமூக பொருளாதார கல்வி அபிவிருத்தியிணை இலக்காகக் கொண்டு கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டங்களை திட்டமிடல் செயற்படுத்துதல் மற்றும் அவற்றை நடாத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளல் செயற்படுத்துதல் போன்றன அபிவிருத்தி பிரிவின் பிரதான செயற்பாடுகளாகும். இந்த அதிகார சபையின் ஆரம்பிக்கப்பட்ட வருமானம் 2006 ஆம் ஆண்டு முதல் இந்த பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசத்தினுள் அபிவிருத்தி சார்பாக பாரிய அளவிலான கருத்திட்டங்கள் எண்ணிக்கை வெற்றிகரமாக செயற்படுத்தியதுடன் அங்கு செயற்பாடுகள் அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் ஸ்தாபித்தமையின் நோக்கத்தை அடைந்துக் கொள்வதற்கு காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனித வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி கடந்த பல வருடங்களில் செயற்படுத்தப்பட்ட இலக்கு கொண்ட வேலைத் திட்டங்களின் ஊடாக வெற்றிகரமான பெறபேறுகளை அடைந்து கொள்ளப்பட்டுள்ளன. விஷேடமாக கிராமிய பிரதேசங்களில் மக்களது வறுமை நிலையை குறைத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு செயற்படுத்தப்பட்ட அந்த அபிவிருத்தி கருத்திட்டங்களின் மூலம் பயன் பெறுவதின் ஊடாக அபிவிருத்தி பிரிவிற்கு மன நிறைவை அடைந்துக் கொள்ளலாம். “திவி நெகுமு’’ தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத் திட்டத்துடன் எமது அதிகாரசபை மற்றும் திவி நெகும திணைக்களம் ஈர்ப்புச் செய்வதற்கு இருந்தமை மற்றும் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை முடிவுருத்துவதற்கு 2012 ஆம் ஆண்டு அபிவிருத்திப் பிரிவு முன்னுரிமை வழங்கி செயற்பட்டது. அதற்கு அமைய 2012 ஆம் ஆண்டு முடிவுறாத மற்றும் ஒப்பந்தம் மேற்கொண்ட கருத்திட்டங்களை முடிவுருத்துவதற்கு கடந்த ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட விவசாய, சுற்றாடல், கால்நடைவள, கிராமிய சிறு கைத்தொழில் மற்றும் சந்தை மேம்பாட்டு கருத்திட்டங்கள் பின்னூட்டல் நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு மேலாக, 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான பயனுகாரிகளின் வாழ்வாதார அபிவிருத்திக்கு பதிலாக 50% மீள அறவிடுதல் அடிப்படையின் கீழ் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களின் ஊடாக சுழல் நிதிக்கு மீளச் செலுத்த வேண்டிய நிலுவை தொகையை அறவிடுவதற்கு செயற்படுதல் 2012 ஆம் ஆண்டு அபிவிருத்திப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாகும். அபிவிருத்திப் பிரிவின் ஊடாக 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மொத்த செயற்பாடுகளும் பின்வரும் பிரிவுகளின் கீழ் விபரமாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

**01.உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி**

இந்த அதிகார சபையின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பதிலாக பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசத்தில் கிராமிய மக்களது விவசாய தொழிலுக்கு முன்னுரிமை வழங்கி உணவு பாதுகாப்பு மற்றும் கிராமிய விவசாய பொருளாதார மேம்பாட்டிற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி என்பன அதிகார சபை ஆரம்பித்தது முதல் மேற்கொள்ளப்பட்டன. விவசாய நடவடிக்கைகள் சார்பாக போதிய அளவு நீர் தொடராக பெற்றுக் கொள்வதற்கு நோக்காகக் கொண்டு சிறு நிர்ப்பாசன திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு சந்தைக்கு நுழைவு வசதி செய்வதற்கு விவசாய வீதி அபிவிருத்தியின் பொருட்டு 2011 ஆம் ஆண்டு அதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

செயற்படுத்தப்படுகின்ற அந்த கருத்திட்டங்களில் 2012 ஆம் ஆண்டிற்கு முடிவுறாத மற்றும் ஒப்பந்தம் மேற்கொண்ட சிறு நீர்ப்பாசன புனர்நிர்மானம் செய்வதற்கும் மற்றும் விவசாய வீதி அபிவிருத்தி மேற்கொள்ளவும் கருத்திட்டங்களை முடிவுருத்துவதற்கும் 2012 ஆம் ஆண்டு அபிவிருத்தி பிரிவிற்கு இயலுமாக இருந்தது. அந்த கருத்திட்டங்களுக்கு உரிய சுருக்க விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

**2011 ஆம் அண்டின் 2012 இற்கு ஒப்பந்தமிடப்பட்ட கருத்திட்டங்கள்**

| தொ.இல | கருத்திட்டம் | செயற்படுத்தப்பட்ட பி.செ.பி. | கருத்திட்ட எண்ணிக்கை | முடிவுறுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சிறு நீர்ப்பாசன புணர்நிர்மானம் மற்றும் அபிவிருத்தி | ஹதரலியத்தை | 6 | 6 |
| 2 | | கலகெதர | 12 | 11 |
| 3 | | ஹாரிஸ்பதுவ | 8 | 8 |
| 4 | | பூஜாபிடிய | 2 | 2 |
| 5 | | அகுரனை | 2 | 2 |
| **உபமொத்தம்.** | | | **30** | **29** |
| 1 | விவசாய வீதி அபிவிருத்தி | ஹதரலியத்தை | 11 | 11 |
| 2 | | கலகெதர | 23 | 18 |
| 3 | | பூஜாபிடிய | 8 | 8 |
| 4 | | அகுரனை | 4 | 4 |
| **உபமொத்தம்.** | | | **46** | **41** |
| **கூட்டு மொத்தம்.** | | | **76** | **70** |

**2011 ஆம் ஆண்டின் 2012 இற்கு முடிவுருத்தப்பட்ட கருத்திட்டங்கள்**

| தொ.இல | கருத்திட்டம் | செயற்படுத்தப்பட்ட பி.செ.பி. | கருத்திட்ட எண்ணிக்கை | மடிவறுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சிறு நீர்ப்பாசன புணர்நிர்மானம் மற்றும் அபிவிருத்தி | ஹதரலியத்தை | 4 | 2 |
| 2 | | கலகெதர | 8 | 5 |
| 3 | | ஹாரிஸ்பதுவ | 22 | 10 |
| 4 | | பூஜாபிடிய | 31 | 20 |
| 5 | | அகுரனை | 9 | 6 |
| **உபமொத்தம்.** | | | **74** | **43** |
| 1 | விவசாய வீதி அபிவிருத்தி | ஹதரலியத்தை | 14 | 8 |
| 2 | | கலகெதர | 49 | 37 |
| 3 | | ஹாரிஸ்பதுவ | 5 | 3 |
| 4 | | பூஜாபிடிய | 7 | 5 |
| 5 | | அகுரனை | 11 | 7 |
| **உபமொத்தம்.** | | | **86** | **60** |
| **கூட்டு மொத்தம்.** | | | **160** | **103** |

## அபிவிருத்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பல
## சிறுநீர்ப்பாசனம்



குபுக வயல்வெளியில் அனைக்கட்டு நிர்மானம்
பூஜாபிடிய



நாரங்கஸ்கும்புர அரலுபொத்த வாய்க்கால் நிர்மானம்
ஹாரிஸ்பதுவ



விகுகும்பொல கல்அமுன வாவி அபிவிருத்தி
ஹரிஸ்பதுவ



கோவிலதெனிய ஒழுங்கை அமைப்பு
கலகெதர

## விவசாய வீதி



ஹல்ஒலுவ எரமுதுகொல்ல விவசாய வீதி மற்றும் பாலம்
அபிவிருத்தி - ஹாரிஸ்பதுவ



விவசாய வீதி அபிவிருத்தி
ஹாரிஸ்பதுவ



கன்தேகும்புர மொரகொல்ல விவசாய வீதி அபிவிருத்தி செய்தல் - கலகெதர



இரிவேரியகல விவசாய வீதி அபிவிருத்தி கலகெதர

## 02. வாழ்வாதார அபிவிருத்தி

வறுமையின்றி இலங்கையும் 2015 ஆம் ஆண்டாகின்ற போது உருவாக்குவதற்கு அதி கௌரவ ஜனாதிபதி அவர்களது ஒரு பிரதான நோக்காகும். வறுமையை ஒழித்தல் வேலைத் திட்டத்தில் வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்கள் பல காணக் கூடியதாக உள்ளது. வருமான உருவாக்கல், வறுமையை குறைத்தல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் செயற்திரனுக்கு உட்படுத்தி கருத்திட்டங்கள் பல இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் 2006 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டது.

2012 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற ஒதக்கீட்டுக்கு அமைய புதிய கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவும் இல்லை. இந்த அதிகார சபையின் பங்குபற்றுகை கடந்த பலவருடங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டு இருந்த வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு உரிய பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொண்டு அவற்றின் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியின் அளவை போதிய அளவு மற்றும் தரமாக அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மெற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் கீழ்

- 2011 ஆம் ஆண்டு கலகெதர ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய, மற்றும் அகுரனை பிரதேச செயலாளர் பிரிவுகளில் செயற்படுத்தப்படுகின்ற மஞ்சள் மற்றும் இஞ்சி நடுகை தொடரான பின்னூட்டல் மேற்கொள்வதின் ஊடாக அவற்றின் உற்பத்தி அளவை மேம்படுத்துதல் மற்றும் தரத்தை உயர்த்துவதற்கும் உற்பத்தி அளவை உயர்த்தவும் பயனுகாரிகள் ஒழுங்கமைப்பு முறையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பயிற்றுவித்தல்.

- 2011 ஆம் ஆண்டு ஹதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய மற்றும் அகுரனை பிரதேச செயலாளர் பிரிவுகளில் செயற்படுத்தப்படுகின்ற பாடசாலை சூழல் வேலைத்திட்டம் மற்றும் மருந்தக தோட்டம் ஸ்தாபித்தல் வேலைத் திட்டத்தில் பின்னூட்டல் மேற்கொண்டு அவற்றினை தொடராக செயற்படுத்துவதற்கு ஆர்வம் ஊட்டுவதன் மூலம் மஹிந்த சிந்தனை அடுத்த இலக்கில் குறிப்பிடப்பட்டுள்ள மரஞ் செடி கொடிகள் மற்றும் பற்சிகளை பாதுகாக்கும் பசுமையான இலங்கை போன்ற அபிமானத்தை வெற்றிகொள்வதற்கு பாடசாலை

மற்றும் சமூக மட்டத்தில் பங்களிப்பை இவ்வதிகார சபையில் செயற்படுத்துவதற்கு உரிய அதிகார பிரதேசமாக சான்றபடுத்துவதற்கு பங்களிப்பு செய்தல்.

- 2011 ஆம் ஆண்டு ஹதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய மற்றும் அகுரனை பிரதேச செயலாளர் பிரிவுகளில் செயற்படுத்தப்படுகின்ற தேனி வளர்ப்பு, கருத்திட்டத்தின் பின்னூட்டல் மேற்கொள்ளப்பட்டு மற்றும் பயிற்சி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது. அதன் ஊடாக உள்நாட்டின் தூய்மையான தேன் பாணி உற்பத்தியை சந்தையில் ஒன்று திரட்டவும் இல்லப் பொருளாதாரத்திற்கு மேலதிக வருமானத்தை ஒன்று சேர்க்கவும் இயலுமான வாழ்வாதாரமாக தேன் பாணி உற்பத்தியை பிரபல்யப்படுத்தவும் பயிர்ச் செய்கைக்கு மனங்கவர் கால்நடை வளத்தை விஷேடமாகக் கொண்டு அப்பிரதேசங்களில் தேனிக்களின் தொகையை மேம்படுத்துவதற்கும் இயலுமாக உள்ளது.

- 2011 ஆம் ஆண்டு மேற்குறிப்பிடப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் செயற்படுத்தப்படுகின்ற ஏற்றுமதி விவசாய பயிர்ச் செய்கை வீட்டுத் தோட்ட மற்றும் பழச் செய்கை போன்ற விவசாய கருத்திட்டங்களின் பின்னூட்டல் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்பான பயனுகாரிகளை ஆர்வமூட்டி அக் கருத்திட்டங்களை தொடராக செயற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல். இதன் ஊடாக அப்பிரதேசங்களில் உள்ள பிரதான விவசாய உற்பத்தி அளவை உயர்த்துதல் மற்றும் அவற்றினது தரத்தை மேம்படுத்துவதற்கு இயலுமாக இருத்தல்.




பாடசாலை சுற்றாடல் வேலைத்திட்டம் பின்னூட்டல் மேற்கொள்ளல்
சங்கராஜபுர மத்திய பாடசாலை, ஹதரலியத்தை

- கலகெதர, ஹாரிஸ்பதுவ, மற்றும் பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 2011 ஆம் ஆண்டு செயற்படுத்தப்படுகின்ற மணப்பெண் அழங்காரம் மற்றும் சுயதொழில் வாழ்வாதார கைத்தொழில் பொருட்டு உபகரணங்கள் வழங்கிய பயனுகாரிகளது பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் ஊடாக இல்லத்தரசிகள் மேலதிக வருமான வழி ஒன்றினை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு மற்றும் மனப்பெண் அழுங்கரித்தல், சுயதொழில் வகையில் வாழ்வாதார முறையாக பிரதேசத்தில் பிரபல்யப்படுத்துவதற்கும் இயலுமாக உள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை இந்த அதிகார சபை நிதிச் செலுத்தி ஆரம்பிக்கப்பட்ட வருமான உருவாக்கல் கருத்திட்டங்களில் அறவிடப்பட

வேண்டி இருந்த 50% சுழல் நிதி தவனைகளை மீண்டும் அதிகார சபை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு மற்றும் அக்கருத்திட்டங்களின் பின்னூட்டல் மேற்கொள்வதற்கும் இயலுமாக இருந்தது.

- பேராதனை தாவரவியற் பூங்கா தோட்ட வளாகத்தில் எமது அதிகார சபையின் ஊடாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள "திவி நெகும" செடி சந்தைப்படுத்தல் நிலையம் தொடராக நடாத்திச் செல்லல் மற்றும் சந்தைப்படுத்தலை உயர் தரத்தினாலான பழச் செடிகள் மறக்கறி கன்றுகள் ஏற்றுமதி விவசாய பயிர்கள் மருந்துச் செடிகள் தென்னங் கன்றுகள் மற்றும் பலகை மரங்கள் சாதாரண விலைக்கு சந்தைப்படுத்தல், நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வருகை தருவோருக்கு உயர் தரத்திலான தரமான செடி வகைகளை சாதாரன விலையில் வழங்குவதற்கு இங்கு இயலுமாக இருப்பதுடன் இந்த அதிகார சபைக்கு மேலதிக வருமானம் ஈட்டல்களுக்கான சந்தர்ப்பம் இதன் மூலம் கிடைக்கின்றது.

## 03.கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி

கிராமிய மக்களது சமய கலாசார சுகாதார மற்றும் சூழல் போன்றவற்றை தரமன முறையில் அபிவிருத்தி செய்வதை பிரதானமாகக் கொண்டு இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு முதல் விஷேடமாக பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் 05 இனுள் அமையப் பெற்றுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 310 இனை உள்ளடக்கியதாக கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டு ஒதுக்கம் செய்யப்பட்ட நிதி ஒதுக்கத்தை பயன்படுத்தி அறநெறிப் பாடசாலைகள் கல்வி அபிவிருத்தி மலசலகூட வசதிகள் மேம்படுத்தல், தாய்சேய் மேம்பாடு, நில மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமை கலைகலாசார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு 2012 ஆம் ஆண்டு எமது அதிகார சபைக்கு இயலுமாக இருந்தது. இந்த வேலைத் திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களின் சுருக்க முன்னேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

❖ **அறநெறிப் பாடசாலை கல்வி அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம்.**

2011 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிராமிய மக்களது பிள்ளைகளின் பொருட்டு அறநெறிப் பாடசாலைகளை மேம்படுத்துவததற்கு தேவையான பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2012 ஆம் ஆண்டு முன்னுரிமை வழங்கப்பட்டது. அந்த கருத்திட்டங்களின் கீழ் பௌத்த அறநெறிப் பாடசாலைகள் 168 முஸ்லீம் அறநெறிப் பாடசாலைகள் 11 பொருட்டு மேசைக் கதிரை காகிதாதிகளுக்கான அலுமாரி, கரும்பலகை மலசலகூட வசதிகள் மற்றும் வெள்ளை பலகை என்பன வழங்கப்பட்டமை தும்பனை, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய மற்றும் அக்குரனை போன்ற பிரதேச சபைகளின் ஊடாக ஒருங்கினைந்து செயற்படுத்தப்பட்டு முடிவுருத்தப்பட்டது. இதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் நீண்ட காலமாக நிலவிய பௌதீக வள குறைபாட்டை அடைந்து கொள்வதின் ஊடாக தரமான அறநெறிக் கல்விக்கு தேவையான மனம் கவர் சூழல் அந்த அறநெறிப் பாடசாலைகள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு பங்களிப்பு செய்ய இயலுமாக இருந்தது. இதன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பில் விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

## அறநெறிப்பாடசாலை அபிவிருத்தி கருத்திட்டம்.

| இல | பி.செ.பிரிவுகள் | பௌத்த அறநெறி பாடசாலை | உபகரணம் வழங்கப்பட்ட அறநெறிப் பாடசாலை | | வழங்கப்பட்டுள்ள பொருட்களின் அளவு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பௌத்த | முஸ்லீம் | டெஸ்க் | கதிரை | கரும்பலகை | நூலக அலுமாரி | காகிதாதி அலுமாரி | வெள்ளை பலகை | அலுவலக மேசை | மாணவர் கதிரை | ஆசிரியர் கதிரை | கூரைத்தகடு |
| 1 | ஹதரலியத்தை | 31 | 24 | 2 | 373 | 38 | 28 | 9 | | 62 | | | | |
| 2 | கலகெதர | 28 | 26 | 1 | 241 | 241 | 29 | - | 32 | 51 | 60 | 30 | 20 | 20 |
| 3 | ஹாரிஸ்பதுவ | 57 | 57 | 2 | 597 | 567 | 51 | - | 37 | 205 | - | - | 1 | - |
| 4 | பூஜாபிடிய | 44 | 44 | 0 | 421 | 411 | 36 | - | - | 62 | - | 12 | - | - |
| 5 | அகுரனை | 17 | 17 | 6 | 196 | 126 | 12 | 1 | 27 | 36 | 1 | | - | - |
| **மொத்தம்** | | **177** | **168** | **11** | **1828** | **1383** | **156** | **10** | **96** | **416** | **61** | **42** | **21** | **20** |





அறநெறிப் பாடசாலைக்கான உபகரணங்கள் வழங்குதல்

<u>மலசலகூட வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டம்</u>

2011 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு பயன்படுத்தி ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய மற்றும் அக்குரனை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிலவும் தொற்று நோய்களை குறைத்துக் கொள்வதற்கும், அவ்வப்போது தொடராக ஏற்படுகின்ற டெங்கு நோய் நுளம்புகள் மூலம் பரவுகின்ற ஆட்கொள்ளி நோயை குறைத்துக் கொள்வதற்கும் சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களைக் கொண்ட சமூகத்தை உருவாக்கவும் மலசலகூட வசதிகள் இல்லாத குடும்பங்கள் 413 இற்கு குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்களின் ஊடாக தெரிவு செய்யப்படுகின்ற மலசலகூட வசதிகள் அபிவிருத்தி செய்வதற்கு வேலைத் திட்டததிற்கு உரிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச சபையின் ஊடாக 2012 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டு முடிவுருத்தப்பட்டது. இந்த வேலைத் திட்டங்களின் கீழ்

- ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவுகள் 130 இன் பொருட்டு சீமேந்து மூடைகள் 650 சீமேந்து புளக் கல் 14300 கூறைத்தகடு 39 மற்றும் மலசலகூடம் (நீர் உடன் கூடிய மலசலகூட போச்சி ) 130 வழங்கப்பட்டு அதற்காக ரூபா 1,635,160.00 செலவு செய்யப்பட்டது

- பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் குடும்பங்கள் 127 இன் பொருட்டு சீமேந்து மூடைகள் பொருட்டு சீமேந்து மூடைகள் 635 சீமேந்து புளக் கல் 13970 கூறைத்தகடு 381 மற்றும் மலசல கூடம் (நீர் உடன் கூடிய மலசலகூட போச்சி) 127 வழங்கப்பட்ட அதற்காக ரூபா 1,597,431.40 செலவு செய்யப்பட்டது

- அக்குரனை பிரதேச செயலாளர் பிரிவில் குடும்பங்கள் 156 இன் பொருட்டு சீமேந்து மூடைகள் 780 சீமேந்து புளக் கல் 17,160 கூறைத்தகடு 468 மற்றும் மலசலகூடம் (நீர் உடன் கூடிய மலசலகூட போச்சி) 156 வழங்கப்பட்டு அதற்காக ரூபா 1,962,199.20 செலவு செய்யப்பட்டது

❖ **குடும்ப சுகாதார அபிவிருத்தி கருத்திட்டம்.**

- 2011 ஆம் ஆண்டு முடிவுறாத குடும்ப சுகாதார மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் ஹதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவுகள் அலதெனிய குடும்ப சுகாதார மேம்பாடு செய்வதன் பொருட்டு ரூபா 689,348.85 மற்றும் சிகிச்சை அளிப்பு கதிரைகள் 36 வழங்கப்பட்டது. அதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 126,000.00 ஆகும்.





## தகவல் தொழில்நட்ப இயலுமையை மேம்படுத்தும் கருத்திட்டம்

2011 ஆம் ஆண்டு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தி ஹதரலியத்தை, கலகெதர, மற்றும் பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அரச உத்தியோகத்தர்கள் இளைஞர் யுவதிகள் மற்றும் பிரதேச குழந்தைகளின் தகவல் தொழில்நுட்ப இயலளவை மேம்படுத்தும் நோக்கில் அந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச சபையின் ஊடாக 2012 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப இயலுமையை மேம்படுத்துவதற்கான கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அவையாவன வருமாரு

- ரூபா 1,277,130.00 முதலீட்டில் மல்டி மீடியா மற்றும் கணனி வசதிகளுடன் முழுமையான சகல வசதிகளுடனான கணனி நிலையம், ஹதரலியத்த பிரதேச செயலாளர் பிரிவில் ஸ்தாபித்து வைக்கப்பட்டது. இதன் பொருட்டு மேசைக் கணனி இயந்திரங்கள் 10, மடிக்கணனிகள் 03 மின் பாதுகாப்பு யு.பி.எஸ். காற்றாடிகள் 10, லேசர் அச்சு இயந்திரம் 01 ஸ்கேன்னர் இயந்திரம் 01, மல்டி மீடியா புரஜக்டர் 01, டிஜிட்டல் கெமரா 01 கணனி மேசை 10 மற்றும் அதன் பொருட்டான கதிரைகள் 10 உம் வழங்கப்பட்டுள்ளன.

- ரூபா 1,377,073.00 முதலீட்டில் மல்டி மீடியா மற்றும் கணனி வசதிகளுடன் முழுமையான சகல வசதிகளுடனான கணனி நிலையம், கலகெதர பிரதேச செயலாளர் பிரிவில் ஸ்தாபித்து வைக்கப்பட்டது. இதன் பொருட்டு மேசைக் கணனி இயந்திரங்கள் 10, மடிக்கணனிகள் 03 வைட் போர்ட் 01, இறும்பு அலுமாரி 01, கேட்போர் கூட கதிரைகள் 10, கோவை அலுமாரி 01, நிறைவேற்றுத் தரம் மேசை 02, நிறைவேற்றுத் தரம் கதிரை 02, கணனி கதிரை 10, கணனி மேசை 10, டிஜிட்டல் கெமரா 01, மல்டி வீடியோ புரஜக்டர் 01, ஸ்கெனர் இயந்திரம் 01, லேசர் அச்சு இயந்திரம் 01 உம் மின்பாதுகாப்பு (யு.பி.எஸ்.) காற்றாடிகள் 10 உம் வழங்கப்பட்டுள்ளன.


- பூஜாபிடிய பிரதேச சபையின் ஊடாக நடாத்தப்பட்டு வருகின்ற கணனி நிலையத்தில் கல்வி வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக மேசைக் கணனி இயந்திரங்கள் 10, 10 யு.பி.எஸ். களுடன், மடிக்கணனிகள் 02, மல்டி மீடியா புரஜக்டர் 01, லேசர் அச்சு இயந்திரம் 01, ஸ்கேன்னர் இயந்திரம் 01, டிஜிட்டல் கெமரா 01 கணனி மேசை 10 மற்றும் அதன் பொருட்டான கதிரைகள் 10 உம் வழங்கப்பட்டுள்ளன. அதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 1,218,080.00 ஆகும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கணனி கல்வி நிலையத்தின் ஊடாக ஹதரலியத்தை, கலகெதர மற்றும் பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழ் இளைஞர் யுவதிகள் மற்றும் பாடசாலை விட்டுச் செல்வோர், தமது பிரதேசத்திலேயே தொழிற் பயிற்சியாக தகவல் தொழில்நுட்பத்தில் அறிவை பெற்றுக் கொள்வதற்கு தேவையான பௌதீக வசதிகள் வழங்குதல் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்ளுதல் இதன் ஊடாக அப்பிரதேசங்களில் வாழ்கின்ற வேலையற்ற இளைஞர் யுவதிகள் மற்றும் பாடசாலை விட்டுச் செல்வோர் பொருட்டு தகவல் தொழில்நுட்ப ரீதியான அறிவை பெற்றுக் கொள்வதற்கு இலகுவான நுழைவை எட்டியுள்ளதுடன் அது அவர்களது சக்தி திறனை மேம்படுத்தி

தற்போதைய தொழில் சந்தையில் காணப்படும் தொழிற் துறைக்கு ஈடுபடுவதற்கு வசதியாகவும் உள்ளது.




கணனிக்கல்வி நிலையம் - கலகெதர பிரதேச சபை கட்டடம்




கணனிக்கல்வி நிலையம் - ஹதரலியத்தை பிரதேச சபை உப பணிமனை

❖ **பாரம்பரிய உள்நாட்டு கலைகலாசார அபிவிருத்தி வேலைத்திட்டம்.**

- மலையக பிரதேச பாரம்பரிய உரிமைகளான சம்பிரதாய கலை கலாசாரங்களை பாதுகாத்து அபிவிருத்தி செய்யும் பொருட்டு இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக 2011 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட உள்நாட்டு பாரம்பரிய கலை கலாசார வேலைத் திட்டங்கள் 2012 ஆம் ஆண்டாகின்ற போது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு முடிவுருத்தப்பட்டு இருந்தது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் ஹதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய மற்றும் அக்குரனை பிரதேச செயலாளர் பிரிவுகளினுள் அமையப் பெற்றுள்ள கலை கலாசார நிலையங்கள் 24 கலாசார உத்தியோகத்தர்களது சிபாரிசின் கீழ் தெரிவு செய்யப்பட்டு தேவைப்பாடுகளுக்கு அமைய காற்றாடி மற்றும் இசைக் கருவிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டன. இதன் பொருட்டு ரூபா 976,095.00 நிதி இவ்வதிகார சபையின் ஊடாக முதலீடு செய்யப்பட்டது. இதன் மூலம் தற்போதைய பயன்பாட்டில் உள்ள உள்நாட்டு மலையக பாரம்பரிய களைஞர்களது அடுத்த பரம்பரையினருக்கு பங்களிப்பு செய்வதற்கு குறைந்த அளவிலான பௌதீகம் மற்றும் நிதி வசதிகளின் கீழ் பாரிய அளவில மேற்கொள்வதற்கு கிடைக்கப் பெறுகின்ற உள்நாட்டு கலை நிறுவனங்களின் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு பங்களிப்பை வழங்குவதற்கு எமது அதிகார சபைக்கு இயலுமாக இருந்தது. ஆகவே, இவ்வேலைத் திட்டத்தினை கலாசார உரிமைகள் தாக்கத்திற்கு உள்ளாகாத வகையில் பாதுகாத்துக் கொள்வதன் பொருட்டு சமா்ப்பிக்கப்படுகின்ற நிறுவனங்கள் பாதுகாத்துக் கொள்வதற்கும் தேவையான கொடைகள் வழங்கி வெற்றிகரமான வேலைத் திட்டமாகும்.




இலங்கை உள்நாட்டு கலைகலாசார நிலையம் -




பிரதீபிகா நடனக் கலை நிலயம் - கலகெதர

# கால்நடைவள அபிவிருத்தி கருத்திட்டம்.

இந்த அதிகார சபையின் முன்னிலையில் ஸ்தாபிக்கப்படவுள்ள உரிய ‘திவி நெகும’’ தேசத்தை கட்டி எழுப்புவோம் அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஈர்ப்புச் செய்வதற்கு உரிய ஒரு நிறுவனமாக இருந்தமையால் 2012 ஆம் ஆண்டின் பொருட்டு புதிய கருத்திட்டங்கள் ஆரம்பிப்பதற்காக நிதி ஒதுக்கீடுகள் தரப்பட வில்லை. 2011.09.19 ஆம் திகதி உதவிப் பணிப்பாளர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் அரம்பிக்கப்பட்ட பால் மாடு வளர்ப்பு ஆடு வளர்ப்பு, மற்றும் கோழி வளர்ப்பு போன்ற கால்நடை வளர்ப்பு கருத்திட்டங்களுக்கு அமைய அடுத்த நடவடிக்கைகளின் பொருட்டு பின்னூட்டல் நடவடிக்கைகள் இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.

2011 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களுக்கு அமைய பால் மாடுகள் ஆடுகள் மற்றும் கோழிக் குஞ்சுகள் கொள்வனவு செய்வதன் பொருட்டு விலை மனுக்கள் சமா்ப்பிக்கப்பட்ட நிறுவனங்களினால் உரிய காலப் பகுதியில் வழங்கள்கள் மேற்கொள்ளப்படாமையினால் அந்த விலங்குகளை பகிர்ந்தளிப்பு நிகழ்சியை 2012 இல் முடிவுருத்தப்பட்டது.

| தொ.இல | பொருட்கள்/விலங்குகள் | அளவு |
|---|---|---|
| 01 | பால்மாடுகள் | 52 |
| 02 | ஆடுகள் | 165 |
| 03 | நாட்டுக் கோழி. | 3024 |





தெரிவு செய்த பயனுகாரிகளுக்கான பால் மாடுகள் பகிர்ந்தளித்தல்






தெரிவு செய்த பயனுகாரிகளுக்கான ஆடுகள் பகிர்ந்தளித்தல்

இதற்கும் மேலாக பால்மாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட சகல பயனுகாரிகளின் பொருட்டும் சுகாதார அமைப்பில் பால் சேகரிப்பினை கொண்டு செல்வதன் பொருட்டு லீற்றர் 10 உள்ளடக்கக் கூடிய பாத்திரங்கள் வழங்கப்பட்டன. அதற்கு அமைய 52 பால் பாத்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.




பால்மாடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பால் சேகரிப்பு பாத்திரம் வழங்குதல்

பால்மாடு வளர்ப்பு கருத்திட்டத்தின் கீழ் சகல பயனுகாரிகளுக்கும் வேறாக போபத்தலாவ, மெனிக் பாலம் பண்ணைகளில் இனவிருத்தி செய்யப்பட்ட பிரேசியன் வகை பால் மாட்டு கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அத்துடன் ஆடு வளர்ப்பு கருத்திட்டத்தின் கீழ்

சகல பயனுகாரிகளுக்கும் ஜமுனாபாரி சானன் வகை ஆடுகள் மூன்று (ஆண் 1/பெண் 02) என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. நாட்டுக் கோழி வளர்ப்பில் கருத்திட்டத்தின் கீழ் பயனுகாரி ஒருவருக்கு சேவல் குஞ்சுகள் 02 உம் கோழிக் குஞ்சுகள் 10 என்ற அடிபப்படையில் ஒரு மாத வயது குஞ்சுகள் 12 வழங்கப்பட்டது.

| தொ.இல | பி.சே.பிரிவு | ஹதரலியத்தை | கலகெதர | ஹாரிஸ்பதுவ | பூஜாபிடிய | அகுரனை |
|---|---|---|---|---|---|---|
| 01 | மாடுகள் | 13 | 09 | 08 | 11 | 11 |
| 02 | ஆடுகள் | 30 | 42 | 30 | 24 | 39 |
| 03 | நாட்டுக் கோழி | 348 | 924 | 468 | 312 | 972 |
| 04 | பால் பாத்திரம் | 13 | 09 | 08 | 11 | 11 |

பால் மாடு வளர்ப்பு கருத்திட்டம் மற்றும் (2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட மாட்டுத் தொழுவம் நன்கொடையும் உள்ளடங்கலாக) ஆடு வளர்ப்பு கருத்திட்டம் 50% சுழல் நிதி முறைமையின் கீழ் செயற்படுத்தப்படுகின்றதுடன் நாட்டுக் கோழி வளர்ப்பு கருத்திட்டங்கள் மற்றும் பால் பாத்திரங்கள் பகிர்ந்தளிப்பது இலவசமாக மேற்கொள்ளப்பட்டது.

பால் மாட்டு வளர்ப்பு கருத்திட்டத்தின் கீழ் கன்றுகள் ஈனுவது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் உயர் தரத்தினாலான தேகாரோக்கியமான கன்றுகள் மற்றும் பால் பெற்றுக் கொள்வதற்கு பயனுகாரிகளுக்கு இயலுமாக உள்ளது.



பால்மாடு வளர்ப்புத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம்



ஆடு வளர்ப்புத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம்

கோழி வளர்ப்புத் திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம்

இதற்கு அமைய திட்டமிடல்கள் தயாரிக்கப்பட்டதற்கு அமைய கால்நடை வளர்ப்பு கருத்திட்டம் சகலதும் 2012 ஆம் ஆண்டினுள் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு இயலுமாக இருந்தது.

## பொறியியல் அலகு

நிர்மானத் துறைக்கு உரியவாறு செயற்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்கள் செயற்படுத்தும் பொருட்டு தேவையான மதிப்பீடுகள் மற்றும் தொழிலநுட்ப ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் தொழில்நுட்ப நிலை கட்டுப்பாடு பிரமானங்களை மேற்பார்வை செய்தல் போன்றன. பொருட் கொள்வணவின் போது தொழில்நுட்ப மதிப்பீடு வேலைத் தளங்களை பரீட்சித்தல் உரிய பற்றுச் சீட்டுக்கள் பரீட்சித்தல் போன்றவற்றிற்கு சிபாரிசு செய்வது பொருளியல் பிரிவிற்கு உரிய பிரதான பொறுப்புக்களாகும்.

### <u>2012 ஆம் ஆண்டு – செயற்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள்</u>

2011 ஆம் ஆண்டு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் உள்நாட்டு விவசாய தொழிலை மேம்படுத்துவதற்கு உரியவாரு மேற்கொள்ளப்பட்ட சிறு நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 340 இன் மற்றும் விவசாய வீதி 337 இன் 2012 ஆம் ஆண்டின் பொருட்டு முடிவுறாத கருத்திட்டங்கள் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும். அந்த கருத்திட்டங்களின் பொருட்டு உரிய பற்றுச் சீட்டுக்கள் மற்றும் நிர்மானங்களின் பிரமானங்கள் பரீட்சித்து கொடுப்பணவுகளை சிபாரிசு செய்வது மேற்கொள்ளப்படுகின்றது.

| பி.செ.பிரிவுகள் | முடிவுறா கருத்திட்டம் | | ஒப்பந்த கருத்திட்டங்கள் | |
|---|---|---|---|---|
| | விவசாய வீதி | நீர்ப்பாசனம் | விவசாய வீதி | நீர்ப்பாசனம் |
| ஹதரலியத்த | 14 | 04 | 11 | 06 |
| தும்பனை | 49 | 08 | 23 | 12 |
| ஹாரிஸ்பதுவ | 05 | 22 | - | 08 |
| பூஜாபிடிய | 07 | 31 | 08 | 02 |
| அகுரனை | 11 | 09 | 04 | 02 |

**முடிவுறா கருத்திட்டங்கள்**

2006,2007 மற்றும் 208 போன்ற ஆண்டுகளில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இறுப்பினும் அந்நிர்மானங்கள் முடிவுருத்தப்படாமல் இருந்த கருத்திட்டங்கள் பல அதிமேன்மைதகு சனாதிபதி அவர்களது எண்ணகருவிற்கு அமைய செயற்படுத்தப்பட்டது. 'முடிவறா கருத்திட்டங்கள் நிர்மானப் பணிகள் முடிவுருத்தப்பட்ட வேலைத் திட்டங்கள்'' கீழ் பிரதேசத்தின் அரசியல் அதிகாரிகளது மற்றும் மக்களது கூடிய வேண்டுகோலுக்கு அமைய நிர்மானிக்கப்பட்ட முடிவுருத்துவதற்கு எமது அதிகார சபையினால் 2011 ஆம் ஆண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் நிலவிய காலநிலை நிலமைக்கு அமைய மற்றும் ஏற்பட்ட செயன்முறைப் பிரச்சினைகள் பலவற்றின் காரணமாக 2011 ஆம் ஆண்டு நிர்மானம் முடிவுருத்திக் கொள்வதற்கு முடியாது போயிருந்த கருத்திட்டங்கள் 07 இனை செய்து முடிப்பதற்கு 2012 இல் ஆரம்பித்து முடிவருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு அமைய பல ஆண்டுகள் இடையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கருத்திட்டங்கள் பல செய்து முடித்து அக்கருத்திட்டங்களின் ஊடாக மக்களுக்கு பயன் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கி நாட்டின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு எமது அதிகார சபைக்கு இயலுமாக இருந்தது.

**1.ஹதரலியத்தை நாரங்கஸ்பிடிய விவசல பாலம் நிர்மானம்.**

நாரங்கஸ்பிடிய அக்கரவத்த தெஹியத்தேமட விவல வெலாகம போன்ற அதி கஷ்டப் பிரதேச விவசாய கிராமங்கள் பல நடுவே ஊடருத்துச் செல்லும் ரம்புக்கன் நதி காரணமாக இந்தக் கிராமம் பல காலமாக பின்வாங்கி இருந்தது. இந்த ஆற்றினை குறுக்காக பாலம் ஒன்றினை நிர்மானிப்பது பாரிய முயற்சிகள் கிராம மக்கள் எடுத்து இருந்த போதிலும் அதற்கு எவ்வித தீர்வும் கிடைக்கப் பெறவில்லை. ஆற்றினை குறுக்காக பயணிப்பதால் பாதிப்புக்கு உள்ளான பாடசாலை மாணவர்கள் முதியவர்களும் பல ஆகும். மக்களது போக்குவரத்தை இலகுபடுத்தவும் பிரதேசத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை எதிர்பார்த்து இக்கருத்திட்டம் 2009 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டு பல்வேறு இடர்கள் காரணமாக நிர்மானப்பணிகள் இடைநடுவில் நிறுத்தி விடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆயினும் 2012 இல் இந்நிர்மானப் பணிகள் மீண்டும் ஆரம்பித்து விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபா மி.13.89 ஆகும். இங்கு 2680 பயனுகாரிகள்

இதன் மூலம் இன்று வரை முகம் கொடுத்த இடர்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு நோக்காகக் கொண்டு முடிவுருத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்த பாலம் பொருட்டு இருந்து நுழைவு வீதி விஸ்தரித்து தருமாறு பிரதேச அரசியல் அதிகாரரிகளை போலவே பிரதேச மக்கலாளும் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோலுக்கு அமைய நுழைவு வீதியையும் அமைப்பதற்கு வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு அமைய 2012 ஆம் ஆண்டு கருத்திட்டத்தின் மொத்த நிர்மானப் பணிகளும் முடிவருத்தப்படுவதற்கு முடியாது போனது. எவ்வாறாயினும் 2012 இல் 95% அளவு நிர்மானப் பணிகள் முடிவுருத்தப்பட்டுள்ளன. இதன் பொருட்டு இவ்வாண்டினுள் ரூ.மி 8.75 முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2013 இல் ஏப்ரல் மாதம் இங்கு மீதமான வேலைகளும் முடிவுருத்தி தும்பனை பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய பிரதேச மக்களது பலவருட காலமாக நிலவி வந்த பிரச்சினைகள் பல வெற்றிகரமாக தீர்வு பெற்றுக் கொள்வதற்கும் அதன் ஊடாக பிரதேச பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு போலவே நாட்டின் அபிவிருத்திக்கும் பாரிய பங்களிப்பை வழங்குவதற்கு அதிகார சபைக்கு இயலுமாக உள்ளது.





விவல பாலம் - ஹதரலியத்தை

## 2. ஹதரலியத்தை நாரங்கஸ்பிடிய விவல பாலத்தின் நழைவு வீதியை அபிவிருத்தி செய்தல்

எமது அதிகார சபையின் ஊடாக ஹதரலியத்தை நாரங்கஸ்பிடிய விவல பாலம் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு அதன் பொருட்டு இருந்த சிறிய நுழைவு வீதியும் விஸ்தரிக்கப்பட்டு மேம்படுத்தி தருமாறு பிரதேச மக்கள் மற்றும் அரசியல் அதிகார பிரமுகர்களும் கேட்டுக் கொண்டனர். அவ்வாறே இந்த பாலம் நிர்மானிப்பதுடன் ஒருங்கினையும் நாரங்கஸ்பிடிய விவல கிராமங்களின் மக்களது போக்குவரத்து தேவைக்காகவும் அதிக அளவு வாகனங்கள் போக்குவரத்து செய்வதால் அந்த சிறிய ஒழுங்கை வீதியையும் விஸ்தரிப்பதற்கு தேவையான காணியை பிரதேச மக்களால் அவர்களது சுயவிருப்பத்திற்கு அமைய வழங்குவதற்கு முன்வந்தனர். அதற்கு அமைய இன்று வரை நிலவி வந்த ஒழுங்கை சிறிய வீதி 12-14 அடிவரையில் அகலமாக விஸ்தரிக்கப்பட்ட நீளம் 235 அடிவரை விஸ்தரிக்கப்பட்டு அகலம் 3 மிற்றர் மற்றும் தடிப்பு மி.மி.150 அக மிகவும வலுவுள்ளதாக கொங்ரீட் இட்டு நிர்மானிப்பதற்கு நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டன. இதன் பொருட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதி ரூபா மி.1.83 ஆகுவதோடு கட்டட வேலை பெறுமதி ரூபா.1.65 ஆகும். இது வரையில் கருத்திட்டத்தின் மொத்த நிர்மானப் பணியில் 85% முடிவுருத்தப்பட்டுள்ளதுடன் 2013 ஏப்ரல் மாதம் ஆகின்ற போது விவில பாலம் நிர்மானப் பணிகள் முடிவுருத்தி தும்பனை பிரதேச சபைக்கு கையளித்து மக்கள் பயன்பாட்டிற்காக விடப்படவுள்ளது. இதற்கு அமைய பாலம் நிர்மானிப்பதற்கு ஒருங்கினையாக நுழைவு வீதியும் நிர்மனிப்பதன் மூலம் பிரதேச மக்களது நாளாந்த போக்குவரத்து நடவடிக்கைகள் என்ற வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்து வழங்குவது அதிக மக்களை ஈடுபடுத்துவதற்கு இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபைக்கு இயலுமாக உள்ளது.





விவல பாலம் - நுழைவு வீதி

### 3. உடுநுவர கியராபிடிய நாகஹமுல ஹொரேகொட்டே வீதி அபிவிருத்தி செய்தல்

இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையினால் ஒதுக்கீடு வழங்கி 2008 ஆம் ஆண்டு தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத் திட்டத்தின் கீழ் இங்கு நிர்மானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பினும் மக்களுக்கு அந்த பயனை பெற்றுக் கொள்ள முடியுமானவகையில் நிர்மானப் பணிகளை முடிவுருத்துவதற்கு முடியாது இருந்தது. அதற்கு அமைய பௌதீக கருத்திட்ட நிர்மானம் ஆரம்பிக்கப்பட்டு நிர்மான நடவடிக்கைகள் 100% முடிவுருத்தப்பட்டது. மதிப்பிடப்பட்ட நிதி ரூ.மி. 3.07 இந்த கருத்திட்டத்தின் பொருட்டு இவ்வாண்டில் செலவிடப்பட்ட நிதி தொகை ரூபா 0.97 ஆகும். இறுதி பற்றுச் சீட்டுக்கள் பொருட்டு செலுத்துவதற்கு உள்ளோம். இந்த வீதி நிர்மானத்தின ஊடாக நேரடியாகவே விவசாய பயனுகாரிகள் 620 அளவில் மக்களது நாளாந்த போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பாரிய வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன் மலைநாட்டு வரலாற்று புகழ்மிக்க லங்கா திலக ரஜமஹவிகாரைக்கு வருகை தருவோர் ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாத் துறையினர் போக்குவரத்து வசதியும் இதன் மூலம் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு அமைய இந்த பிரதேசத்தின் விவசாய மக்களது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியை போலவே சுற்றலாத் துறையில் அபிவிருத்திக்கும் பாரிய பங்களிப்பாகும். இந்த கருத்திட்டம் 2013 பெப்ரவரி மாதம் உடுநுவரை பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## 4. கொத்மலை நவ திஸ்பனே பல் நோக்கு கட்டடத் ொகுதி நிர்மானப் பணிகள் முடிவுருத்தல்

நுவரெலியா மாவட்டத்தின் கொத்தமலை பிரதேச செயலாளர் பிரிவின் ஹரங்கல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமையப் பெற்றுள்ள இந்த கட்டடத் தொகுதியில் நிர்மானம் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இருப்பினும் அங்கு சகல நிர்மானப் பணிகளும் முடிவுருத்தாததன் காரணமாக 2011 ஆம் அண்டு எமது அதிகார சபையினால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் அவ்வாண்டினுள் சகல நிர்மானப் பணிகளும் முடிவுருத்த முடியாது போனதுடன் 2012 ஆம் ஆண்டு சகல நிர்மானப் பணிகளும் முடிவுருத்தப்பட்டது. இங்கு மதிப்பிடப்பட்ட நிதி தொகை ரூபா.மி. 1.19 ஆகும். அத்துடன் இந்த பல்நோக்கு கட்டடத் தொகுதி ஊடாக பிரதேச பாடசாலை மாணவ மாணவிகளுக்கு கல்வி நடவடிக்கைகள் பொருட்டு கணனி நிலையம் நடாத்திச் செல்வதற்கும் பொது நூலகம் நடாத்திச் செலவதற்கும் தேவையான கட்டட வசதிகள் வழங்குவதற்கு அதிகாரசபைக்கு இயலுமாக இருந்தது. அப்பகுதியில் பாடசாலை மானவ மாணவிகள் போலவே மக்களும் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு உந்து சக்தியாக இது அமைகின்றது. இந்த கட்டடம் 2013 ஜனவரி மாதம் கொத்மலை பிரதேச செயலாளருக்கு கையளிக்க தீர்மானிக்கப்பட்டது.



முன்னய நிலை



வேலை முடிவுருத்தப்பட்ட கட்டடம்

## 5. கொத்மலை மாவெல சனசமூக கட்டட கட்டத்தின் மீதி வேலைகளை முடிவுருத்தல்

நுவரெலிய மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் மாவெல கிழக்கு பிரிவின் நிர்மானம் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. இந்த கட்டடத்தின் நிர்மானப்பணிகள் பூரணப்படுத்தி முடிவுருத்தப்பட வில்லை. அதன் காரணமாக 2011 ஆம் ஆண்டு மிண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் அசாதாரன காலநிலை காரணமாக அவ்வாண்டில் நிர்மான வேலைகளை முடிவுருத்த முடியாது போனது. அதற்கு அமைய 2012 ஆம் ஆண்டு இங்கு நீர் வசதிகள், மலசலகூட வசதிகள், மற்றும் பாதுகாப்பு வேளியுடன் அடங்கிய கசல நிர்மானப் பணிகளும் முடிவுருத்தப்பட்டது. இதன் ஊடாக பிரதேசத்தில் 950 அளவில் பயனுகாரி மக்களுக்கு சங்கங்களை நடாத்திச் செல்வதற்கும் பிள்ளைகளுக்கு மிகவும் பாதுகாப்பாக அமைக்கப் பெற்றுள்ள மிகவும் விருப்பத்திற்கு அமைய முன் பாடசாலை நடவடிக்கைகள் நடாத்திச் செல்வதற்கும் பாரிய வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு மதிப்பீடு

தொகை ரூ.மி.1.30 ஆகும். 2013 ஜனவரி மாதம் இது கொத்மலை பிரதேச செயலாளருக்கு கையளிக்கபபட்டது





முன்னய நிலை

வேலை முடிவுருத்தப்பட்ட கட்டடம்

## 6. கெத்மலை மல்லன்த பல்நோக்கு கட்டடத் தொகுதி மீதமான நிர்மான வேலைகளை முடிவுருத்தல்

நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின் மல்லந்த பிரிவில் நிர்மானிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த கட்டடத்தின நிர்மானப்பணிகள் முடிவுருத்தப்பட்டு இருக்க வில்லை. அதன் காரணமாக 2011 ஆம் ஆண்டு முடிவுறா கருத்திட்டத்தினை நிர்மானித்து முடிவுருத்துவதற்கு முடியாது போனதால் 2012 ஆம் ஆண்டு இந்த சகல நிர்மான பணிகளும் முடிவருத்தப்பட்டது. அதற்கு அமைய இந்த கட்டம் 2013 ஜனவரி மாதம் கொத்மலை.பி.செயலாளருக்கு கையளிக்கப்படவுள்ளது மதிப்பிடப்பட்ட தொகை ரூ.மி.1.04 ஆகுவதோடு இந்த ஆண்டு செலவு செய்யப்பட்ட தொகை ரூபா.மி.0.82 ஆகும். இதன் ஊடாக பிரதேச மக்களது பொ நடவடிக்கைளின் பொருட்டு ஒன்று சேர்வதற்கு இடம் ஒன்று கிடைத்தமை அவர்களது பொது விடயங்களின் பொருட்டு வசதிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்வாறே சமூர்த்த உத்தியோகத்தர்களது பணிமனை, கிராம உத்தியோகத்தர்களது பணிமனை குடும்ப சுகாதார பணிமனை என்பன இதில் நடாத்திச் செல்லப்படுவதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





வேலை முடிவுருத்தப்பட்ட கட்டடம்

முன்னய நிலை

### 7. அகுரனை சித்தோடை பாலம் நிர்மானம் மற்றும் நுழைவு வீதியை கொங்ரீட் இடுதல்

இந்த கருத்திட்டம் 2008 ஆம் ஆண்டு கம நெகும கிராம எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் அகுரனை பிரதேச செயலாளர் பணிமனையினால் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்படடு வேலை முடிவுருத்தப்படாத கருத்திட்டம் ஒன்றாகும். அதற்கு அமைய முடிவறா கருத்திட்டம் நிர்மானப் பணிகள் முடிவுருத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டு மீன்டும் அதன் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மதிப்பிடப்பட்ட நிதி தொகை ரூ.மி.3.20 ஆகும். இங்கு 2011 இல் முடிவருத்தப்படுகின்ற போது பாதுகாப்பு மதில் நிர்மானித்தல் உட்பட கருத்திட்டத்திற்கு உரியவாரு நுழைவு வீதியை நிர்மானிப்பு நடவடிக்கைகள் 35% முடிவுருத்தப்பட்டது. ஆயினும் எமது அதிகார சபையினால் நிர்மான வேலைகளை பரீட்சிப்பின் பொருட்டு நியமிக்கப்பட்ட பட்டய பொருளயியல் குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பில் பாலம் நிர்மானத்தின் பொருட்டு அகுரனை பிரதேச செயலாளர் பணிமனையில் மேற்பார்வையின் கீழ் அமைக்கப்பட்டு இருந்த அத்திவாரம் இந்த பால நிர்மானத்திற்கு பொருத்தமற்ற நிலையில் உள்ளதாக வெளிப்பட்டன. அதற்கு அமைய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி சபையின் ஊடாக பாலத்திற்கு உரிய புதிய திட்டமிடல் மற்றும் மதிப்பீடு தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மெற்கொள்ளப்பட்டன. அந்த நிறுவனத்தினால் மதிப்பிடப்பட்டு தயாரிக்கப்பட்ட எம்மிடம் கையளிப்பதற்கு தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 2012 ஆம் ஆண்டினுள் இந்த நிர்மானப் பணிகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு முடியாது போனது. எவ்வாறாயினும் பயனுகாரிகள் 2475 அளவு மக்கள் நாளாந்தம் போக்குவரத்து நடவடிக்கைகளின் பொருட்டு மதக்கடமைகளுக்கு செல்லவும் பாரிய வதி வழுங்கும் இப்பாலத்தின் மீதமான நிர்மானப்பணிகளை 2013 ஆம் ஆண்டு மிகவிரைவில் முடிவுருத்தி மக்களுக்கு கையளிக்கப்படவுள்ளது.

## <u>விஷேட கருத்திட்டங்களை செயற்படுத்துதல்</u>

### 1. கலகெதர பொது மலசலகூட தொகுதியை நிர்மானித்தல்

கலகெதர பிரதேச செயலாளர் பணிமனையின் கலகெதர நகரத்தில் பொது மலசலகூட தொகுதி மிகவும் தேவையாக உள்ளதால் பிரதான பஸ் நிலையத்தின் வைத்தியசாலை, நீதி மன்றம், பிரதேச செயலாளர் பணிமனைகள் பாடசாலை உட்பட அரச நிறுவனங்கள் மற்றும் வியபார தளங்கள பலவும் அமையப் பெற்ற கேந்திர நிலையமாக உள்ளது. இதனால் கூடுதலான மக்கள் நாளாந்தம் நகரத்திற்கு வருகை தருகின்றனர். அங்கு குறிப்பிட்ட மக்களின் பொருட்டு நகரத்தில் இருந்த ஒரே ஒரு மலசல கூடத் தொகுதி உடைந்து விழுந்ததால் பயன்படுத்த முடியா நிலையில் இருந்தது, அவ்வாறே அது மக்களது பொது சுகாதாரத்தின் பொருட்டு பாரிய கஷ்டமும் இருந்தது. அதனால் மக்களது வேண்டுகோல் பிரதேச அரசியல் வாதிகள் வேண்டுகோல் என்பவற்றிற்கு அமைய மிகவு நவீன மயப்படுத்தப்பட்ட முறையில் பொது மலசலகூட தொகுதி நிர்மானிப்பதற்கு அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டது. இது 2012 ஆம் ஆண்டு 03 மாத காலத்தினுள் ரூபா.மி.1.28 செலவில் மடிவுருத்தி தும்பனை பிரதேச சபைக்கு கையளித்து மக்களது பயன்பாட்டிற்கு விட்டது. இது கலகெதர நகரத்திற்கு பாாரிய குறைபாடாக இருந்த மலசலகூட தொகுதியை அதிகாரசபை நிர்மானிக்க கூடியதாக இருந்தது.





வேலை முடிவுருத்தப்பட்ட தறபோதைய நிலை

**2. கடுகண்ணாவை நகரத்தின் பொது மலசல கூடத் தொகுதி**

மலையகத்திற்கு உட்பிரவேசிக்கும் நுழைவாயல் எனக் கருதப்படும் கடுகண்ணாவை நகரத்திற்கு பொது மலசலகூட தொகுதி அத்தியவசியமாக உள்ளது. நாளாந்தம் நகரத்திற்கு வருகை தருகின்ற பிரதேச மக்களது மற்றும் பஸ் தரிப்பு நிலையத்திற்கு வருகை தருவோர், சந்தைக்கு வருகை தருவோர் தூர பிரதேசங்களில் இருந்து இங்கு வருவோர் சுற்றலாத்துறையினருக்கும் மலசலகூடட வசதி அளிப்பதில் பாரிய இடர்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர். அதற்கு அமைய கடுகண்ணாவை நகர சபையின் வேண்டுகோலுக்கு அமைய அரசியல் வாதிகளது வேண்டுகோலுக்கு அமையவும் பொது மக்களது வேண்டுகோல் என்பவற்றை கவனத்திற் கொண்டு ரூபா.மில்லியன் 2.45 செலவு செய்து நவீன முறையில் மலசலகூடத் தொகுதி நிர்மானித்து வழங்குவதற்கு 2012 ஆம் ஆண்டு எமது அதிகார சபைக்கு முடியுமாக இருந்தது. இது வெளிநாட்டு சுற்றுலாத்துறையினருக்கு போன்றே அங்கவீனர்களுக்கும் பயன்படுத்தக் கூடிய வசதிகள் உடன் நகர அழகிற்கு பொருத்தமான வகையில் மிகவும் நவீன முறையில் நிர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மலசல கூட தொகுதி நிர்மானிப்பதோடு அதனை சிறந்த முறையில் பராமரிப்பதற்கும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கடுகண்ணாவை சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.





கடுகண்ணாவை பொது மலசல கூடம்

# கணக்காய்வு அறிக்கை


විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT


මගේ අංකය / எனது இல / MyNo: சீஎல்/கேஉ/எச்/யூடீஏ/2012 - எப்ஏ/2013/55

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2014 சனவரி 23

தலைவர்
இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை

**இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 26 ஆம் இலக்க இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2013 ஆகஸ்ட் 26 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்


අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1. உயர் கணக்கீட்டு நடைமுறைகள்**

கொள்கை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சிடமிருந்து 2006 ஆகஸ்ட் 06 ஆம் திகதி நன்கொடையாக பெறப்பட்டிருந்த 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 500,000 தொகையான வாகனம் உயர் கணக்கீட்டு நடைமுறைகளின் பிரகாரம் மோட்டார் வாகனம் மற்றும் அரசாங்க மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையின் வாகனங்கள் பழுதுபார்க்கப்படுவதற்காக 2008 ஆகஸ்ட் 25 ஆம் திகதி செலவிடப்பட்ட ரூபா 113,977 தொகை ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அதே தொகையால் ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது நேர்ந்த கொடுக்கல்வாங்கல்களுக்கு 2010 திசெம்பர் 31 ஆம் திகதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறவேண்டிய சுழற்சி நிதியத்தின் ரூபா 6,382,743 தொகையான மீதிக்காக உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 8,535,592 ஆகக் காணப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் அம் மீதி ரூபா 160,724 ஆக காட்டப்பட்டதனால் ரூபா 8,374,868 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 8,177,224 தொகையான நிலையான வைப்பு மீதியில் 2013 சனவரி 15 ஆம் திகதி வைப்புச் செய்யப்பட்ட ரூபா 501,115 தொகையான நிலையான வைப்புப் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் நிலையான வைப்புப் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காண்பித்திருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

சுழற்சி நிதியத்திற்காக நலன்பெறுனரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 8,374,868 தொகையான உறுதிப்படுத்தப்படுவதற்காக கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

நிதிப் பிரமாணம் 882 இன் பிரகாரம், அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக்கட்டளை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், பிணை வைக்க வேண்டிய பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் தாம் நிரந்தரமாக அப்பதவியில் நியமிக்கப்பட்டவராகக் கருதி பிணை வைக்க வேண்டிய போதிலும் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 30,000 கூட்டுத்தொகையான பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1. நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 38,770,251 தொகையான பற்றாக்குறையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,679,287 தொகையானமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 44,449,538 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு முன்னைய ஆண்டின் செயலாற்றல் தேவைப்பாட்டிற்கு மேலாக திறைசேரியிலிருந்து கட்டுநிதி பெற்றுக்கொள்ளல் மற்றும் மீளாய்வாண்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக போதியளவில் கட்டுநிதி கிடைத்திருக்காமை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அதிகாரசபையின் தேறிய நடைமுறைச் சொத்து ரூபா 42.4 மில்லியன் தொகை அதாவது 66 சதவீதத்தாலும், தேறிய சொத்துக்கள் ரூபா 44.9 மில்லியன் அதாவது 49 சதவீதத்தாலும், குறைவடைந்திருந்ததுடன் ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு திரண்ட நிதிய மீதியும் ரூபா 38.7 மில்லியன் தொகை அதாவது 65 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டிற்காக மூலதன ஏற்பாடு பெறப்படாதிருந்த போதிலும் ரூபா 34,362,613 தொகையான அபிவிருத்தி வேலை

செய்யப்படுதல் இந் நிதி விளைவை உருவாக்கல் தொடர்பாக முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1. செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 பிரதான பிரிவுகளின் கீழ் கடந்த ஆண்டின் போது பொறுப்பிற்குள்ளானதும் பிற்போட்டதுமான 237 அலகுகளைக் கொண்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 50.1 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அம் மதிப்பிடப்பட்ட செலவில் ரூபா 30.34 மில்லியன் தொகை அதாவது 61 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் திட்டமிடப்படாத ரூபா 34,362,614 தொகையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) சீவனோபாய மற்றும் கல்வி துரித அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 03 பிரதேச செயலகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 413 நலனாளிகளுக்காக ரூபா 5,194,796 பெறுமதியான மலசலகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக 26 நலனாளிகளின் தெரிவுப் பரிசோதனையின் போது 02 மலசலகூடங்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இது 08 சதவீத அளவில் காணப்பட்டது. இதன் படி ஒருவருக்காக ரூபா 12,578 படி 24 மலசலகூட உபகரணத் தொகுதிக்காக ரூபா 301,872 பெறுமதியான பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை மற்றும் மலசலகூடம் நிர்மாணிக்கப்படாது சில நலனாளிகளுக்கு இப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தின் மூலம் ஆக்கபூர்வமான செயலாற்றல் அடையப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2011 ஆம் ஆண்டின் போது சீவனோபாய அபிவிருத்தி (மிருகக் கட்டுப்பாடு) செயற்திட்டத்தின் சுழற்சி நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பசுமாடுகளின் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட நலனாளிகளுக்கு 52 பசுக்கள்

வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வழங்கப்பட்டு ஒரு வருடம் கடப்பதற்கு முன்னர் 06 பசுக்கள் பல்வேறு காரணங்களால் இறந்திருந்தது. இறந்த பசுக்கள் மற்றும் இதற்குரித்தான மாட்டுத்தொழுவங்களுக்காக அதிகாரசபையால் ஏற்கப்பட்ட செலவினம் ரூபா 507,291 ஆன போதிலும் காப்புறுதி நட்டஈடாக ரூபா 40,000 மாத்திரமே பெறப்பட்டிருந்தது.

(ஈ) ஜாதிக சவிய மற்றும் கிராம எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2008/ 2009 ஏற்பாட்டைக் கொண்டு பசுப்பால் குடிப்பதை ஊக்குவிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அக்குறணை பிரதேச செயலக வளாகத்தில் ரூபா 587,427 செலவில் 2010 சனவரி 01 ஆம் திகதி முதல் 20 மாதங்கள் அளவில் பாற்சாலை நடாத்தப்பட்டிருந்தது. 2011 செப்தெம்பர் 30 ஆம் திகதி முதல் அது மூடப்பட்டு கட்டிடம் மற்றும் இதற்கு உரிய உபகரணம் பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அக் கட்டிடமும் உபகரணமும் அந்நாள் முதல் 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

2007 நவம்பர் மாதம் முதல் 2011 யூலை மாதம் வரையான காலப்பகுதிக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்ய பங்களிப்புத் தொகை குறித்த தினத்தில் செலுத்தப்பட்டிராமையால் ரூபா 848,429 தொகையான தண்டப்பணத்தைச் செலுத்த நேர்ந்திருந்ததுடன் அத் தண்டப்பணத்தைப் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை.

## 4.3 பதவியிணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவதற்காக தேவையான தகைமைகளைக் கொண்டிராத உத்தியோகத்தர் 2012 நவம்பர் 07 ஆம் திகதி முதல் அப் பதவிக்கு உயர்த்தப்பட்டு அத்திகதி முதல் 2013 மே 31 இல் உள்ளவாறும் ரூபா

368,203 தொகையான சம்பளங்கள் மற்றும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட 18 பதவிகளுக்கு 50 ஊழியர் எண்ணிக்கை காணப்பட்டதுடன் அப் பதவிக்காக நிரந்தர அடிப்படையில் 40 ஊழியர்கள், ஒப்பந்த அடிப்படையில் 04 ஊழியர்கள், நாளாந்த அடிப்படையில் 03 ஊழியர்கள் மற்றும் சேவைக் கொள்வனவு அடிப்படையில் இரு ஊழியர்களுடன் 49 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**4.4 வாகனப் பாவனை**

அதிகாரசபையிடமிருந்த 03 வாகனங்கள் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை விளைவற்றுக் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**5.1. நிதிக்கூற்றுக்கள்**

அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள், முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்திற்காக கணக்காய்வுத் தினமாகிய 2013 யூலை 19 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான நிதிக்கூற்றுக்கள் மற்றும் முகாமைத்துவ சபையால் மீளாய்விற்குட்பட்டு அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்படாது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

அதிகாரசபையால் 2008 முதல் 2012 வரையான ஐந்தாண்டு காலத்திற்கு உரித்தான கூட்டிணைந்த திட்டத்திற்கான 95 துணை வேலைப் பகுதிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அத் திட்டம் காலக்கிரமத்தில் மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டிணைந்த திட்டத்தில் இலக்கிடப்பட்ட பணிகளில் 19 துணை வேலைப் பிரிவுகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதாவது 20 சதவீத அளவானவையாகும். இதன் பிரகாரம், 76 துணை வேலைப் பிரிவுகள் அதாவது 80 சதவீதம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.3 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

5.4 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டம் தத்துருபமான அடிப்படையில் தயாரிக்கப்பட்டிராததுடன் அத் திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கோ அல்லது கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5.5 பாதீட்டு மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையிலான முரண்கள்

(அ) 09 மீண்டெழும் செலவின விடயங்களின் ஏற்பாடுகள் போதாமையால் அச் செலவின விடயங்களுக்காக 19 சதவீதம் முதல் 257 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 1,574,552 தொகையான ஏற்பாடு வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(ஆ) 11 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 1,608,756 தொகையான ஏற்பாடுகள் எஞ்சியிருந்ததுடன் அச் சேமிப்பு ஏற்பாடு 11 சதவீதம் முதல் 100 வரை வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) செயற்திட்ட அமுலாக்கம்
(ஆ) சுழற்சி நிதிய நிகழ்ச்சித்திட்டம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) சீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டங்களை நோக்கத்துடன் செயற்படுத்தல்

(உ) கணக்கீடு

எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*